
# தரிசனம்



ஆத்மஜோதி நா. முத்தையா

உ

சிவமயம்

# தரிசனம்

ஞானசுரபி

ஆத்மஜோதி நா. முத்தையா

இந்து சமயப் பேரவை

கனடா

உரிமை பதிவு :
யுவ ஆனி, தி.பி. 2026
(ஜூன் 1995)

© Copyright Reserved
இந்து சமயப் பேரவை, கனடா.

விலை :

ஓவியர் : அ. சந்திரஹாசன், சென்னை.

ஒளி அச்சுக்கோப்பு, அச்சிடல் :
*காந்தளகம்*
834, அண்ணாசாலை, சென்னை 600 002.
தொலைபேசி 843 505.

# பதிப்புரை

ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் 1994ஆம் ஆண்டு யூலாய் மாதம் கனடாவில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாட்டிற் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார்கள். ரொறன்ரோவிலும் மொன்றியலிலும் நடத்தப்பெற்ற இம்மாநாட்டிற் பங்கு பற்றியதைத் தொடர்ந்து, பலவகையான சமயப் பணிகளிலும் ஈடுபட்டார்கள். அவற்றுள் ஒன்று கனடா இந்து சமயப் பேரவையை முன்னின்று அமைத்தமையாகும்.

சுவாமிகள் கனடாவில் தங்கி இருந்த காலத்தில் இந்து சமயப் பேரவை அந்தர் யோகப் பயிற்சிகள், குடும்பப் பிரார்த்தனைகள், சமயச் சொற்பொழிவுகள் போன்றவற்றை ஒழுங்கு செய்திருக்கின்றது. அத்துடன், சுவாமிகளுக்குப் பாராட்டுக் கூட்டம் ஒன்றையும் நடத்தி 'ஞான சுரபி' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

இந்து சமயப் பேரவையின் நோக்கங்களில் சமய நூல்களை வெளியிடுதலும் ஒன்றாகும்.

ஒருமுறை இந்துசமயப் பேரவை உறுப்பினர் சிலருடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கையில், தான் தரிசித்த மகான்கள் சிலரைப் பற்றிப் பத்திசிரத்தையோடு முத்தையா சுவாமிகள் குறிப்பிட நேர்ந்தது. மகான்களைத் தரிசித்த அனுபவத்தை ஒரு நூலாக எழுதினால் மக்களுக்குப் பயனுள்ளதாக அமையலாம் என்ற கருத்தை அவரிடம் தெரிவித்தோம். பத்தே நாட்களில் 'தரிசனம்' என்னும் இந்நூலை அவர் எழுதி முடித்தார். பலவகைப்பட்ட நிகழ்ச்சிகளுக் கிடையிலும் இந்நூலை அவர் எழுதி முடித்தமை மகான்கள் மீது அவர் கொண்டிருக்கும் பக்தியை மட்டுமல்லாது, அவரது நினைவாற்றல், எழுத்தாற்றல் என்பனவற்றையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

படிக்குந்தோறும் படிக்குந்தோறும் உள்ளத்தை உருக்கும் இந் நூலைக் கனடா இந்து சமயப் பேரவையின் முதல்

வெளியீடாக மக்கள்முன் வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். தன்னலம் பாராத சமய சேவைக்குத் தன்னை அர்ப்பணித்து, அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் சுவாமிகளின் நூலை வெளியிடும் வாய்ப்பினைத் தந்தருளிய இறைவனை வணங்குகின்றோம்.

தமிழ் ஈழத்தில் முன்பு வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக இருந்த திரு. தி. மாணிக்கவாசகர் இந்நூலுக்கு ஆசியுரை தந்திருக்கின்றார். இந்து சமயப் பேரவையின் போஷகர்களில் ஒருவரும் 'ஞானசுரபி' அவர்களின் அரிய நண்பர்களில் ஒருவருமான திரு. வி. கந்தவனம் ஆசிரியர் அணிந்துரை வழங்கியுள்ளார். இவர்களுக்கு எமது வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

இதனை அழகுற அச்சேற்றவுதவிய 'காந்தளகம்' வெளியீட்டு நிறுவன அதிபர், அறிஞர் திரு. க. சச்சிதானந்தன் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'ஞானசுரபி' முத்தையா சுவாமிகள் தமது முன்னுரையில், 'அடியேனுடைய அனுபவங்கள் ஒருவருக்காவது பயன்படுமானால், அதனையே பெரும் பேறாகக்கருதுவேன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவர் கருதும் பேற்றினை, இந்நூலைப் படிப்பவர் ஒவ்வொருவரும் அவருக்கு வழங்குவர் என்பது எமது நம்பிக்கை.

ந. பரராசசிங்கம்
தலைவர்
கனடா இந்து சமயப் பேரவை

# வாழ்த்துரை

ஸ்ரீமான் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் எழுதிய 'தரிசனம்' என்னும் நூலை கனடா இந்து சமயப் பேரவை வெளியிடவிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

முத்தையா அவர்கள் இலங்கையில் நாவலப்பிட்டியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நான் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் மலைநாட்டுத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்ததை நான் நன்கு அறிவேன். பிரதானமாகச் சமயத் துறையில் அவர் செய்த தொண்டுகளை அப்பகுதி மக்கள் பாராட்டிப் பேசக் கேட்டிருக்கிறேன்.

நாவலப்பிட்டியில் அவர் தொடங்கிய சமயப் பணியை இலங்கை முழுவதிலும் தொடர்ந்து செய்துவந்தார். இன்று பிற நாடுகளில் வாழும் சைவத் தமிழ் மக்களும் அவர் சேவைகளாற் சிறப்படைந்து வருகின்றனர். கனடாவிலும் அவர் தமது சமயப் பணிகளைத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

கனடாவில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டியது எங்கள் பொறுப்பு. பிரதானமாக, வருங்காலத்தில் எமது பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதே அமைத்துக்கொள்ள வேண்டும். எமது இளஞ் சந்ததியினருக்கு எமது மொழியையும் சமயத்தையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வாய்ச் சொல்லில் வீரராக இராமல் செயலில் இப்பொழுதே இறங்குதல் புத்தியாகும். இல்லையென்றால் வருங் காலத்தில் எமது பிள்ளைகள் தமிழை மறந்து போகக்கூடும். சமயம் போதிக்கும் தருமத்துக்கு மாறாக நடக்கக்கூடும். எமது மரபுகளை அறியாமல் வாழும் சூழ்நிலை தோன்றலாம்.

இவ்விதமான துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட நாம் விடலாகாது என்ற உயர்ந்த நோக்கத்துடனேயே தமிழர்கள்

புலம் பெயர்ந்த நாடுகளில் தமது பணிகளை முத்தையா பிள்ளை அவர்கள் விஸ்தரித்து வருகின்றார்கள். அவரது முயற்சிகளுக்குக் கனடாவிலும் வாழும் சைவத் தமிழ் மக்கள் தேவையான ஆதரவைக் கொடுத்து உதவ வேண் டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன், அவரது பணிகளைத் தொடர்ந்து செய்யப் பல தொண்டர்கள் முன்வர வேண்டியதும் அவசியமாகும்.

அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் வளர்க்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரி வாராக!

**தி. மாணிக்கவாசகர்**

# அணிந்துரை

'தரிசனம்' என்னும் இந்நூலிற் பத்து மகான்களைத் தான் தரிசித்த பான்மைபற்றி விவரிக்கின்றார் ஞானசுரபி முத்தையா அவர்கள். ரமணர், சுத்தானந்தர், சாயி பாபா, யோகர், சிவானந்தர், சித்தானைக் குட்டி, ஞானானந்தர், இராம தாசர், காட்டுச் சாமியார், சடைவரதர் ஆகிய பதின்மரைக் காணக்கிடைத்த பேற்றினை விளக்குகையில் அரவிந்தர், சிதானந்தர், பாலயோகி ராமதாசர், கிருஷ்ணாபாய் போன்ற பெருமக்கள் தரிசனங்கள் கிடைத்தமையையும் பெருமையுடன் குறிப்பிட்டுச் செல் கின்றார்.

மகான்கள் மகாத்மாக்கள். மகாத்மாக்கள் முதிர்ச்சியடைந்த ஆன்மாக்கள். ஆன்ம முதிர்ச்சி பக்குவம் எனப்படும். பக்குவம் பெற்றவர்கள் தெள்ளத் தெளிந்தவர்கள். 'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்.' இவர்கள் வள்ளல் பிரானை உள்ளத்தில் வைத்து வழிபடுகின்றவர் கள். காயமே கோயிலாக வாழ்பவர்கள்.

இத்தகைய திருவாளர்களைக் காண்பதற்கும் அவரோடு இணங்கி இருப்பதற்கும் தவஞ் செய்திருத்தல் வேண்டும். ஞானசுரபி முத்தையா தவஞ்செய்தவர்; மகான்கள் தரிசனங்களால் தமது தவத்துக்கு வலுவூட்டியவர்; பக்குவநிலையை உயர்த்திக் கொள்ளும் பேறு பெற்றவர். அவர்கள் போதனைகளுக்கேற்பத் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கும் பணியில் ஈடுபட்டு வருபவர். தனக்குக் கிடைத்த தவச்செல்வரின் தரிசன அனுபவங்களை என்றும் நினைந்து நினைந்து அக முருகி ஆனந்தக் கண்ணீர் சொரிபவர். நெஞ்சில் கொண்டு திரிந்த நிகரற்ற இந்த அனுபவங்கள் கனடாவில் எழுத்து வடிவம் பெறத் திருவருள் கைகூடியிருக்கின்றது.

தரிசனங்கள் பல அற்புதங்களோடு நடைபெற்றிருப்பது கவனிக்கத் தக்கது. பகவான் ரமணர் சமாதி அடைந்த காட் சியைக் காணும் பாக்கியம் முத்தையா அவர்களுக்குக்

கிடைத்தமையும் சுத்தானந்தரைக் காணச்செல்கையில் ஏற்பட்ட தடைகள் நீங்கியமையும் தெய்வீக நிகழ்ச்சிகள்.

சாயி பாபாவைத் தரிசிக்கச் சென்றபோது அவரே ஓர் அன்பர் வடிவத்தில் தோன்றிப் பிருந்தாவனத்துக்கு வழி காட்டியமையும் புட்டபர்த்தியில் விசேட நேர்முகத்தின் போது கும்பிடாத பக்தனுக்கு வேலை கிடைக்க அருள் செய்தமையும் சாயி பாபாவின் அற்புதங்கள்.

யோகர் சுவாமிகள் திருநெல்வேலியைச் சேர்ந்த அன்பர் ஒருவர் கனவில் தோன்றிப் பிட்டு அவிக்கச் சொல்லி அதனை முத்தையா அவர்களைச் சாப்பிட வைத்த சம்பவம் நெஞ்சைப் பிழிகின்றது. இவ்விதமே சித்தானைக் குட்டிச் சுவாமிகளின் அற்புதங்களும் உள்ளத்தை உருக்கு கின்றன.

ஞானானந்த ஆச்சிரமத்துக்கு எவ்வித அறிவித்தலும் இன்றி முத்தையா குழுவினர் சென்றபோதும், அங்கு இவர்களின் வருகை பற்றி இனந் தெரியாத ஒருவர் அறிவித்திருந்த தையும் அதனால் ஆச்சிரமத்தில் இவர்களை வரவேற்பதற்கான ஆயத்தங்கள் முன்கூட்டியே செய்யப் பட்டதையும் படிக்கையில் தெய்வசித்தம் தெளிவாகின்றது.

மகான்களை அவ்வப்போது தரிசிப்பதும் அவர்களின் அருளைப் பெறுவதும் ஆன்ம ஈடேற்றத்தைத் தரவல்லன. அவர்களின் ஆசிர்வாதம் அடியவர்களை எவ்விதம் வழிப் படுத்தும் என்பதற்குச் சடை வரதர் தரிசனம் நல்ல சான்று. முத்தையா அவர்கள் பத்துப் பன்னிரண்டு வயதாக இருக் கையில் சடைவரதர் அவரை ஆசிர்வதித்து, 'நீ சட்டம் பியாராய் இருப்பாயடா... உலகம் முழுவதும் சுற்றுவாயடா... ஒரு குறையும் இல்லாது வாழ்வாயடா....' என்று சொன்னதெல்லாம் முத்தையா அவர்களைப் பொறுத்த அளவில் அப்படியே உண்மையாகி இருப் பதைக் காண்கின்றோம்.

மகான்களைக் குருவாக நினைந்து பூசிக்கின்ற மரபு இந்து

சமய மரபு. இறைவன் குருவடிவாக எழுந்தருளி அடியார் களுக்கு அருளும் இயல்பினன்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

என்பது சிவஞான போதம். மணிவாசகப் பெருமானைக் குருவாக வந்து சிவபுரத்தரசர் ஆட்கொண்டருளிய முறை யைத் திருவாசகம் தெளிவாக்கும்.

எனின், குருவை இனம் காண்பதற்கும் மனப் பக்குவம் வேண்டும். பக்குவம் பெற்ற முத்தையா அவர்கள் மகான் களைக் குருவாகப் போற்றி அவர்களிடத்தில் இறை வனைக் கண்டு இன்புற்றிருக்கின்றார். 'ரமண பகவான் நயன தீட்சை வழங்கி முதலாவது குருவானார்; சுத்தானந்த சுவாமிகள் ஸ்பரிச தீட்சை அளித்து இரண்டாவது குருவானார்' என்றெல்லாம் அவர் குறிப் பிடுகின்ற போது மகான்களை அவர் இனங்கண்டு கொண்ட முறையை அறியக்கூடியதாக இருக்கின்றது. ஞானானந்த தரிசனத்தில் குருவின் மகத்துவத்தை அவர் விளக்கிக் கூறுகையில் அவரது குரு-சீட அனுபவம் தெற் றென வெளிப்பாடாகின்றது.

முத்தையா அவர்கள் ஒரு சமூக சீர்திருத்தவாதியுமாகை யால் ஆங்காங்கே பல சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அந்நிலைமைகள் குறித்துச் சிந்தித்துச் செயற்படவும் எம்மைத் தூண்டிவிடுகின்றார்.

நூல், முத்தையா அவர்களுக்கேயுரிய எளிய இனிய நடை யில், படிக்குந்தோறும் பரவசமூட்டும் பாங்கில் அமைந்திருக் கின்றது. தாம் தரிசனஞ் செய்த மகான்களை எம்மையும் தரிசிக்க வைக்கும் அரியதொரு பணியை அழகுறச் செய்திருக்கின்றார். அவர் பெற்ற இன்பத்தை யாமும் இந் நூலைப் படித்துப் பெறுவோமாக!

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

-திருமந்திரம்.

**வி. கந்தவனம்**
*20.08.1994*

# முன்னுரை

தரிசனம் என்பதற்கு இறைவனையோ, குருநாதனையோ, மகான்கள் ரிஷிகள் சாதுக்களையோ தரிசித்தல் எனப் பொருள்படும். அடியேனுடைய வாழ்க்கையிற் பலமகான்களைத் தரிசிக்கும் வாய்ப்பை ஆண்டவன் அருளினான். அதனையே அடியேன் அடியேனுக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

இந்த அனுபவத்தை எழுத்தில் தருமாறு கனடா இந்து சமயப் பேரவையினர் வேண்டிக் கொண்டனர். அன்பர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க வேண்டியதும் அடியேனுடைய கடமைகளில் ஒன்றாகும். அடியேனுடைய அனுபவங்கள் ஒருவருக்காவது பயன்படுமானால் அதனையே பெரும் பேறாகக் கருதுவேன்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.''

''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே.''

என்பது தாயுமானவர் வாக்கு.

அடியேனுடைய பிதற்றல்களை மேலான உபதேசமாகக் கருதி நூல்வடிவில் அழகியமுறையில் அச்சில் கொண்டு வந்த கனடா இந்து சமயப் பேரவையினருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் தொண்டு நீடுவாழப் பிரார்த்திக்கின்றேன்.

-ஆசிரியர்

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| 1. ரமண தரிசனம் | ..... 13 |
| 2. சுத்தானந்த தரிசனம் | ..... 23 |
| 3. சாயி தரிசனம் | ..... 31 |
| 4. யோக தரிசனம் | ..... 41 |
| 5. சிவானந்த தரிசனம் | ..... 48 |
| 6. சித்தானைக்குட்டி தரிசனம் | ..... 55 |
| 7. ஞானானந்த தரிசனம் | ..... 62 |
| 8. இராமதாச தரிசனம் | ..... 68 |
| 9. காட்டுச்சாமியார் தரிசனம் | ..... 76 |
| 10. சடைவரதர் தரிசனம் | ..... 81 |

# ரமண தரிசனம்

நாவலப்பிட்டியில் ஒரு பிடவைக் கடையின் மேல்மாடி அறை ஒன்றில் வசித்த காலம். அதில் வேலை செய்யும் சில இளைஞர்கள் ஆத்மீக நாட்டம் உள்ளவர்கள். ஓய்வு நேரங்களில் அடியேனுடைய அறைக்கு வந்து ஆத்மீக சம்பந்தமாகவும் யோகம் சம்பந்தமாகவும் உரையாடும் வழக்கம் உண்டு.

ஒருநாள் சின்னத்தம்பி என்ற இளைஞர் ஒரு புத்தகத்தை மறைத்து வைத்துக் கொண்டு,இன்று உங்களுக்கு ஆத்மீகப் புதையல் ஒன்றை அறிமுகப்படுத்த விரும்புகிறேன் என்று "ரமண விஜயம்" என்ற நூலை அடியேனிடம் கொடுத் தார்கள். அந்த நூலைத் தான் மூன்று முறை வாசித்து விட்டதாகவும் அதை இன்னும் பலமுறை வாசித்தாலும் தாகம் அடங்காது போலிருக்கிறது என்றுங் கூறினார்கள்.

இளைஞர் கூறிய முன்னுரை அதைப் பல முறை வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை முதலிலேயே உண்டாக்கிவிட்டது. நூலின் மேலட்டையில் 'ரமண விஜயம்' என்று பெரிய எழுத்தில் இருந்தது. கீழே பார்த்தேன் யோகி சுத்தானந்த பாரதியார் என்று அச்சிடப்பட்டிருந்தது. உள்ளே திறந்தேன் ரமண பகவான் புன்சிரிப்புடன் காணப் பட்டார். அவருடைய புன்முறுவல் அடியேனை அப்படியே விழுங்கிவிட்டது.

அன்று வெள்ளிக்கிழமை. அடியேன் மாரி அம்பாளையும் கதிரேசனையும் தரிசித்துவிட்டு அடியேனுடைய அறைக்கு வந்தபோதுதான் இந்த ஆத்மீகப் புதையல் கிடைத்தது. அன்றைய வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் ஏதோ ஒரு

இன்பம் அனுபவித்தது போன்று இருந்தது. காரணம் தெரியாத இன்பநிலையிலேதான் இந்த ஆத்மீகப் புதையலும் கிடைத்தது. சுமார் இருநூறு பக்கங்கள் கொண்ட அந்த நூலை இரவு மூன்று மணிக்குள் வாசித்து முடித்துவிட்டேன். அதன் பின்புதான் நித்திராதேவி ஆட்கொண்டாள். காலை சுமார் எட்டுமணி இருக்கும். இளைஞர் வந்து கதவைத் தட்டினார். இன்று சனிக்கிழமையோ என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தார்.


ஏதோ ஒரு புதிய உலகத்தில் வசித்த அடியேனுக்குச் சனிக்கிழமை என்ற வார்த்தைதான் இவ்வுலகிற்கு அழைத்து வந்தது. அடியேனுடைய மேசையின்மீது கிடந்த ரமண விஜயத்தை இளைஞர் கண்ணுற்றார். வாசிக்கத் தொடங்கி விட்டீர்களா என்ற வினாவை எழுப்பினார்.

இரவு 9 மணியளவில் வாசிக்கத் தொடங்கினேன். திறந்த புத்தகத்தை விடிய மூன்று மணிக்குத்தான் மூட முடிந்தது. அந்த ஆறுமணித்தியாலமும் மனம் எங்கும் ஓடவில்லை. நீங்கள் தந்த ஆத்மீகப் புதையலுக்குள்ளேயே புதைந்து விட்டது. ஆறு மணித்தியாலமும் ஒருவகைத் தியானம் என்றே கூறலாம்.

சனியும் ஞாயிறும் எங்கும் செல்லவில்லை. பகவான் ரமணரும் யோகி சுத்தானந்தரும் தம்முடனேயே இருக்கச் செய்து விட்டார்கள். திங்கள் காலையில் பாடசாலை செல்வதற்காக மேல் மாடியிலிருந்து கீழ் இறங்கியபோது இளைஞரிடம் நூலை நீட்டினேன். எத்தனை முறை வாசித்தீர்கள் என்று கேட்டார். குறைந்தது ஏழு முறையாவது வாசித்திருப்பேன் என்று கூறினேன்.

வாசித்தேன், படித்தேன் என்று சொல்வது அபசாரம். ரமண விஜயத்தைத் தியானித்தேன் என்று தான் சொல்ல வேண்டும். ரமண விஜயத்திற்கூடாக ரமணரையும் சுத்தானந்தரையும் தரிசித்தேன். உள்ளத்தில் இருவரும் பேரொளிப் பிழம்பாகத் திகழ்ந்தனர்.

சில நாட்கள் அவர்கள் திரு உருவங்களே உள்ளத்தை நிரப்பிக் கொண்டிருந்தன. இதைத்தான் அப்பர் சுவாமிகள்



தவத்திரு ரமண மகரிஷி

''உயிராவண்ணம் இருந்து உள்ளக் கிழியின் உரு எழுதி'' என்றும் ''உற்றுநோக்கி உள்ளக்கிழியின் உரு எழுதி'' என்றும் கூறினாரோ என்று அடியேன் அப்பரை அகத்தில் நினைந்தேன்.

இன்றுந்தான் அந்தத்தியானம் ஒளியாகத் திகழ்கின்றது.

ரமண விஜயம் மனதில் ஒரு தாகத்தை உண்டாக்கி விட்டது. ரமண தரிசனம் பெறவேண்டும், சுத்தானந்தரைக் காண வேண்டும் என்பதுதான் அந்தத் தாகம். ''விநாயகனே வேட்கை தணிவிப்பான்'' என்று பக்தர் ஒருவர் கூறியது போல ரமண தரிசனந்தான் வேட்கையைத் தணிவிக்கும் என்று உணர்ந்தேன்.

இலங்கையும் இந்தியாவும் சுதந்திரம் பெறாத காலம். பாஸ்போட், விசா, செலாவணி ஒன்றும் இல்லாத காலம். அடியேன் ஒரு மார்கழி மாத விடுமுறையில் திருவண்ணாமலை யாத்திரையை மேற்கொண்டேன். 31 ரூபாவுக்கு ரிக்கெற் ஒன்று எடுத்தால் ஒரு மாதத்திற்குள் தென் இந்தியாவில் எந்த இடத்திற்கும் பிரயாணம் செய்யலாம் என்றிருந்த காலம்.

தலைமன்னாரிலிருந்து கப்பலிலேதான் தனுஷ்கோடி செல்லவேண்டும். கப்பலில் ஏறினவுடன் அடியேன் வைத்திருந்த இலங்கை நோட்டு நூறு ரூபாயைக் கொடுத்தேன். இந்திய நோட்டில் நூறு ரூபா தந்தார்கள். நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தில் திருவண்ணாமலைக்கு ரிக்கெற் கேட்டபோது அவர் கணக்குப் பார்க்கிற சோம்பல் தனத்தில் 'தனுஷ்கோடி வரைக்கும் ரிக்கெற் தருகிறேன். நீங்கள் அங்குச் சென்று ரிக்கெற் எடுக்கலாம். செலவு ஒன்றுதான்' என்றார்.

தனுஷ்கோடியில் ரிக்கெற் பெறுவதற்கு நாலைந்து பேர் வரிசையில் நின்றார்கள். அடியேனும் அவர்கள் வரிசையில் நின்றேன். அடியேனுடைய முறை வந்தபோது திருவண்ணாமலைக்கு ரிக்கெற் என்றேன். அதற்கு அவர் திருக் கார்த்திகையை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு ரிக்கெற்

கொடுப்பதை மட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என்றார். அப்படியானால் திருவண்ணாமலைக்கு அடுத்த புகையிரத நிலையத்திற்குத் தாருங்கள் என்றேன். அவர் சிரித்துவிட்டு எட்டு அணா வைத்துக் கொடுங்கள் என்றார். முதலில் அவர் கேட்டது எனக்குப் புரியவேயில்லை.

அடியேன் கொடுத்த பணத்தில் ரிக்கெற் பணத்திற்கு மேலாக எட்டு அணா மாத்திரம் எடுத்துக் கொண்டு மீதிப் பணத்தையும் திருவண்ணாமலைக்குரிய ரிக்கெற்றையும் தந்தார். பெரிய புகையிரத நிலைய அதிபர் எட்டு அணா வாயாற் கேட்டு வாங்கினாரே என்று அதிசயப்பட்டேன்.

புகையிரதப் பெட்டியில் ஏறியவுடன் ஒன்றரை அணாவுக்கு ஒரு சம்பார்ச் சாதமும் ஒன்றரை அணாவுக்கு ஒரு தயிர்ச் சாதமும் வாங்கினேன். முழுவதையும் அடியேனால் உண்ணவே முடியவில்லை. பாதி பாதி தான் உண்ண முடிந்தது. மீதியைக் கீழே நின்றவர்களிடம் கொடுத்தேன்.

புகையிரதத்தில் பலர் சிநேகிதமானார்கள். மானாமதுரையில் ஒரு பையன் ஏறினார். அவர் திருவண்ணாமலைக்குக் கார்த்திகைத் தீபத்திற்குச் செல்பவர். இருவரும் ஒருவருக்கொருவர் துணையானோம். ரமண பகவானுடைய பெயரையே அவர் கேள்விப்பட்டதில்லை. நீர் ரமண பகவானையும் தரிசிக்க வேண்டும் என்று சொல்லி வைத்தேன். இருவரும் ரெயில் சிநேகரானோம்.

எழும்பூரில் புகையிரதம் மாறி ஏற வேண்டும். அங்கிருந்து ஒரு பெட்டி இணைப்பார்கள். நண்பருக்கு இவை எல்லாம் நல்ல அனுபவம். பலமுறை திருவண்ணாமலைக்கே சென்ற அனுபவமும் உண்டு. இருவரும் புகையிரத மேடைக்கே வராமல் அந்தப் பெட்டி நின்ற இடத்திற்குத் தண்டவாளத்தைக் கடந்து சென்றோம். போட்டர் எங்கள் இருவரையும் வந்து பிடித்துக் கொண்டான். தண்டவாளத்தைக் கடந்து செல்லக்கூடாது என்பது தெரியாதோ என்றான். நாங்கள் தெரியாது என்றோம்.

எங்கள் இருவரது ரிக்கெற்றுகளையும் வாங்கி வைத்துக் கொண்டான். ஒரு வாங்கில் உட்காரச் சொன்னான்.

நாளைக் காலை 9 மணிக்கு பஞ்சாயத்தில் கொண்டு போய்ச் சேர்ப்போம். அவர்கள் சொல்லும் தண்டத்தைக் கொடுத்துத்தான் நாளை இரவு நீங்கள் பயணம் செய்ய லாம் என்றான். நான் புகையிரத நிலைய அதிபரிடம் முறையிடுவோம் வா என்று பையனை அழைத்தேன். காந்தி பிறந்த ஊரில் இந்த அநியாயமா என்றேன்.

இதற்கிடையில் ஒரு ரூபாவைக் கொடுத்து ரிக்கெற் பெற்றுச் செல்லுங்கள் என்று புத்தி கூறினான். அவன் பேசிய விதத்தில் அவனுடைய ஆள் என்று தெரிந்தது. புகையிரதம் புறப்படும் வரை ரிக்கெற்றை வைத்திருந்து புகையிரதம் போன பின்பு ரிக்கெற்றைத் தருவான். ஒரு முழுநாள் வீணாகக் கழியும் என்று அவனும் புத்தி கூறி னான்.

அடியேனோடு கூட வந்தவர் ஒரு ரூபாவைக் கொடுத்து ரிக்கெற்றைப் பெற்றுக் கொண்டார். இப் பொழுது நாங்கள் எப்படிப் போவது என்று கேட்டேன். தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் தண்டவாளத்தைக் கடந்து செல்லலாம் என்றும் கூறினான்.

திருவண்ணாமலை போய்ச் சேர்ந்தோம். குளத்தில் இறங்கி நீராடினோம். பகவான் ரமணரும் இந்த குளத்தில் நீராடித்தான் துறவு பூண்டார். அதனை நினைக்கும் போது உடம்பு புல்லரித்தது. கோயிலினுள்ளே சென்று ஒரு ஐயரி டம் எட்டு அணாவைக் கொடுத்து அர்ச்சனை என்றேன். அவர் கோத்திரம் என்ன என்றார்? அடியேன் கோத்திர மும் சூத்திரமும்தான்; சுவாமி பேரில் அர்ச்சனை என் றேன். அவர் உடனே கோத்திராய நம, சூத்திராய நம என்று மந்திரத்தை ஆரம்பித்தார். அழுவதா? சிரிப்பதா என்றுதான் தோன்றியது. சினிமாப் பாட்டு ஒன்று நினை வுக்கு வந்தது. 'சிலர் சிரிப்பார், சிலர் அழுவார் நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்' என்பதுதான் அந்தப் பாடல். அடியேனும் சிரித்து அழுது கொண்டே ரமணாச் சிரம் போய்ச் சேர்ந்தேன்.

அங்கு சென்றதும் ரமண பகவானுடைய தரிசனத் திற்கு முன் பகவானுடைய தம்பியார் சர்வாதிகாரி என்று

அழைக்கப்படும் நிரஞ்சனாந்தரைச் சந்தித்தேன். இலங்கையில் இருந்து வருவதாகவும் இரண்டு வாரம் தங்குவதற்கு ஒரு அறை வேண்டும் என்றும் கூறினேன். பகவானுடைய பிறந்த தினம் இன்னும் பத்து நாட்களில் வரப்போகிறது. பல தேசங்களிலிருந்தும் வருவார்கள். ஆதலால் ஒரு நாள் மாத்திரம் தங்கலாம் என்றார்.

அடியேன் 25 ரூபாயைக் கொடுத்து, 'இதனை ஆச்சிரம வளர்ச்சிக்காக வைத்திருங்கள். அடியேன் நகரத்தில் ஒரு கோட்டலில் தங்கித் தினமும் இங்கு வந்து செல்கின்றேன்' என்றேன். அவர் சிரித்துவிட்டு 'உங்களைப் போன்றவர்கள் தங்குவதற்காகத்தானே பகவானுடைய ஆணைப்படி அறைகள் கட்டியுள்ளோம். பகவானிடம் இலங்கையிலிருந்து வந்து நீங்கள் கோட்டலில் தங்கினால் ஆச்சிரமத்திற்கே இழுக்கல்லவா?' என்று கூறி நீங்கள் எத்தனை நாள் ஆனாலும் தங்கலாம் என்றார்.

அடியேன் மகிழ்வுடன் அவர் காட்டிய அறையில் அடியேனுடைய பெட்டியைப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு பகவான் இருந்த மண்டபத்தை நோக்கிச் சென்றேன். மண்டபத்தில் சுமார் 300பேர் அளவில் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். அந்த அறையினுள்ளே காலடி வைத்ததும் ஒரு ஆத்மீக அலைக்குள்ளே அடியேன் இருப்பதை உணர்ந்தேன். வாசலில் கால் வைக்கும் போதே பகவான் இருக்கும் இடத்தை உற்று நோக்கினேன். ஒரு திருநீற்றுக்குவியல் போல் பகவானுடைய தோற்றம் இருந்தது. பகவானுடைய காந்தம் போன்ற கண்களுடைய பார்வை அடியேனுடைய உள்ளத்தையும் ஊடுருவிச் சென்றது. இந்த அனுபவத்தைச் சொற்களாற் சொல்லமுடியாது. அருணகிரியார் ஓரிடத்தில்

''எல்லாம் அற என்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா''

என்கின்றார். வாய்விட்டுப் பேசொணாதது.

''சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே''

என்ற இடம் அதுதான் போலும்.

அடியேனும் அடியார் மத்தியில் தியானத்தில் அமர்ந்தேன். எவ்விதக் கஷ்டமுமின்றி மனம் தியானத்தின் ஆழத்திற்குச் சென்றுவிட்டது. எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ தெரியாது. மணி பன்னிரண்டுக்குக் கோயில் மணி ஓசை கேட்டு எல்லாரும் தியான நிலையினின்று இவ்வுலக நிலைக்கு வந்தனர்.

சாப்பாடு மண்டபத்தை நோக்கி நகர்ந்தனர். அந்தணர்களுக்கு ஒரு பக்கமாகவும் மற்றையோருக்கு ஒரு பக்கமாகவும் உணவு பரிமாறப்பட்டது. பகவான் அந்தணர் அல்லாத பக்கத்திலிருந்தே உணவுண்டார். உணவு படைக்கப்பட்டதும் பகவான் அவ்வுணவை நன்கு பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக்கி உண்டார். முடிவில் அந்த இலையை விரலால் வழித்து வழித்து உண்டதால் முதலில் போடப்பட்ட இலை போலப் பரிசுத்தமாகவே காணப்பட்டது. ஒரு சோற்றுத் துகள் கூடக் காணப்படவில்லை. அந்த இலையில் வேறொருவர் உண்ணலாம் போன்றிருந்தது.

ஒருமுறை ஒரு அன்பர் எறும்புகள் நாய்களுக்காவது மிச்சம் உதவுமே என்றார். அதற்குப் பகவான் 'உமக்கு நாய்மீதும் எறும்புமீதும் அன்பு உண்டா' என்று கேட்டார். அவர் உடனே 'ஆம்' என்றார். 'அப்படியானால் முதலில் உமது நாய்க்கு உணவு வைத்தே நீர் பின்பு சாப்பிட வேண்டும். எறும்பின் மீது அன்புண்டானால் எறும்புப் புற்றுக்குள் சிறிதளவு உணவைக் கொண்டு போய் போட்டுவிட்டு நீர் பிறகு சாப்பிடும்' என்றார். இதற்கு அந்த அன்பரால் எவ்வித மறுமொழியும் கூறமுடியாது மௌனியானார்.

ரமணாச்சிரமத்தில் அதிகாலை மூன்று மணிக்கே வெந்நீர் தயாராகிவிடும். வெந்நீரில் ஸ்நானம் செய்துவிட்டு நான்கு மணிக்குள் பகவான் தங்கி இருக்கும் மண்டபத்தில் தியானத்தில் அமர்ந்தால், காலை ஏழு மணிவரை செய்யும் தியானம் அற்புதமானது. அம்மண்டபத்துள் எல்லோரும் தியான சொரூபிகளாகவே காணப்படுவர். இந்த நிலையை அவரவர் அனுபவிக்கலாமே தவிர பிறருக்கு வாய்விட்டுப் பேச முடியாது.

பகவானிடம் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இலட்சுமி என்ற பசுவந்து செல்லும். அவர் தடவிக் கொடுத்து ஒரு பழம் கொடுத்தால் தான் அவரை விட்டு அகலும். அவருடைய ஸ்பரிசத்தில் அப்பசு மெய்மறந்து நிற்கும் நிலை பார்ப்போர் உள்ளத்தில் பக்தி உணர்வைத் தூண்டும். அப்பசு இறந்த போது பகவானே தமது கையி னால் சமாதி வைத்த காட்சி இன்றும் உள்ளத்தை விட்டு அகலவில்லை.

ஒருமுறை பொண்டிச் சேரியில் கவர்னராக இருந்தவ ரின் பிரத்தியேக காரியதரிசி திருவண்ணாமலைக்கு வர வேண்டியிருந்தது. அப்பொழுது சுவாமி சுத்தானந்த பார தியார் அரவிந்தாச்சிரமத்தில் மோனத் தவம் புரிந்து கொண்டிருந்தார்கள். காரியதரிசி சுத்தானந்தரிடம் சென்று தான் அண்ணாமலை செல்லப் போவதாகவும் அங்கு என்ன பார்க்க வேண்டும் என்று கேட்டார். அதற் குச் சுவாமிகள் உமது அரசியல் கடமைகள் எல்லாம் முடிந்த பின் நகரத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் ரமணாச்சிரமம் என்று ஒன்றிருக்கிறது. அங்கு சென்றால் ஒரு தவமுனிவரைக் காணலாம். அவரைத் தரிசித்து வாருங்கள் என்றார்.

காரியதரிசி வழி நெடுகிலும் சுத்தானந்தர் கூறிய தவ முனிவரையே நெஞ்சத்தில் சுமந்து சென்றார். ரமணாச் சிரமம் சென்றதும் பண்டைத் தவமுனிவர் ஒருவரைத் தரி சித்த திருப்தியைப் பெற்றார். இவருக்கு ஆங்கிலம் நன்கு வராது. பிரான்சிய மொழியில் தான் எழுதிச் சென்ற கடிதத்தைப் பகவானிடம் கொடுத்துக் கைகட்டிக் கொண்டு நின்றார். பகவான் தனது சிஷ்யரிடம் கூறி அவர் இருப்ப தற்கு ஒரு நாற்காலி போடச் செய்தார். இப்படி யாருக்கும் பகவான் நாற்காலி போடச் செய்ததே கிடையாது.

பகவான் அக்கடிதத்தை முன்னாலிருந்த வெள்ளைக் காரர் ஒருவரிடம் கொடுத்தார். அவர் அதனை ஆங்கிலத் தில் மொழி பெயர்த்துக் கூறினார். ''எனக்கும் ஆத்மீகத் தில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனால் இந்த ஆணவம் அதனைத் தடுக்கிறது. சுவாமிகள்

என்மீது கருணை கூர்ந்து அருள் பாலிக்கவேண்டும்'' என்பதுதான் அக்கடிதத்தின் சாரம்.

அடியேனுக்கு அன்றையத்தினம் முதல்வரிசையில் முதலாம் ஆளாக இருந்து தியானம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. பகவானுடைய முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். பகவானுடைய கண்ணிலிருந்து ஒரு ஒளி காரியதரிசியின் முகத்தில் பாய்ந்ததைக் கண்டேன். காரியதரிசி அக்கணமே அடியற்ற மரம் போல வீழ்ந்திருக்கக் கண்டேன். காரியதரிசி பகவானைக் கைகூப்பி வணங்கினார். அந்த வெள்ளைக்காரரிடம் தான் பகவானை நாடி வந்த காரியம் கைகூடி விட்டதாகவும் பகவான் மேற்கொண்டு ஏதாவது கூறினால் அதனை எழுதி அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டு மோட்டாரில் ஏறித் தன் வழியே சென்று விட்டார். இவை எல்லாம் சுமார் ஐந்து நிமிட நேரத்திற்குள் நடந்த செயல்களாகும். ஆன்மாவின் பக்குவ நிலைக்கேற்பவே இறைவனும் ஆட்கொள்ளுகின்றான்.

பகவான் சமாதி அடையும் தருணம் வந்துவிட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் மண்டபத்தின் உள்ளேயும் புறம்பேயும் கூடியிருந்தனர். அன்றையத்தினம் அக்காட்சியைக் காணும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது.

பகவானுடைய கட்டிலுக்கு மேலுள்ள கூரையினூடாகச் சோதி ஒன்று புறப்பட்டு வடதிசையாகச் சென்று மறைந்ததை வெளியிலிருந்தவர்கள் அத்தனை பேரும் கண்டு களித்தனர். ரமணசோதி மறைந்து விட்டது. உள்ளே இருந்தவர்களுக்கு வெகு நேரத்தின் பின்தான் நடந்த விஷயம் தெரியவந்தது.

சுந்தரர் திருக்கைலை சென்றபோது உபமன்யு முனிவர் அவரைச் சோதியாகத் தரிசனை செய்த சம்பவத்தை இச்சம்பவம் நினைவூட்டுகின்றது.

# சுத்தானந்த தரிசனம்

பகவான் ரமணமகரிஷிகளைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டியவர் சுவாமி சுத்தானந்த பாரதியார் ஆவர். ஆகவே அவரைத் தரிசிக்க வேண்டும் என்ற அவா எழுந்தது. சுத்தானந்தர் அரவிந்தாச்சிரமத்தில் மோனத்தவம் புரிகின்றார் என்பதைக் கேள்வியுற்று அங்கு சென்றேன். அந்தக்காலத்தில் பொண்டிச்சேரிக்குள் செல்பவர்கள் தனியாக ஒரு விசா எடுக்கவேண்டும். இச்செய்தி அடியேனுக்குத் தெரியாது. பொண்டிச்சேரிக்குப் புகையிரதத்திற் சென்றேன். மூன்று புகையிரத ஸ்தானங்களுக்கு அப்பால் எல்லோரையும் இறக்கி பெட்டிகள் எல்லாம் பரிசீலனை செய்துதான் அதே புகையிரதத்தில் அனுப்பிவைப்பார்கள்.

அங்கு வரிசையாக நின்ற தீர்வை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் போன்றோரைக் கண்ணுற்றேன். ஒருவர் விபூதி நிறைந்த நெற்றியுடன் சந்தனப் பொட்டும் வைத்து நிற்பதைக் கண்டேன். அவரிடம் நேராகச் சென்று எனது இலங்கைக் கடவைச் சீட்டைக் காட்டினேன். அதனைப் பார்த்துவிட்டு இது இந்தியாவிற்குள் வருவதற்கு அனுமதி. ஆனால் பொண்டிச்சேரிக்கு தனியாக விசா பெற வேண்டும் என்றார்.

"ஐயா இச்செய்தி எனக்குத் தெரியாது. நான் இலங்கையிலிருந்து வருகின்றேன். அரவிந்தாச்சிரமம் சென்று சுவாமி சுத்தானந்த பாரதியாரைத் தரிசிப்பதுதான் எனது முக்கிய நோக்கம். நான் இனித் திரும்பிச் சென்று பொண்டிச்சேரிக்கு தனியான விசா எடுத்துக் கொண்டு வந்து அவரைக் காண்பது என்பது முடியாத காரியம். ஐயா,

அடியேனும் தமிழன். நீங்களும் தமிழர். நல்ல ஒரு கருமத் திற்குத்தான் செல்கின்றேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஐயா! நீங்கள் மனம் வைத்தால் நான் தரிசனை செய்து திரும்பிவிடுவேன். அந்தப் புண்ணியம் உங்களைத் தான் சாரும்'' என்றேன். அவர் சிரித்துவிட்டுச் சரி போங்கள் என்றார்.

திரும்பிவரும் போது இன்னொரு பொலிஸ்காரர், எனது பாஸ்போர்ட்டை பார்த்துவிட்டு நீர் எப்படிச் சென் றீர்? பொண்டிச்சேரி விசாவைக் காட்டும் என்று கடுமை யாகக் கூறினார். நானோ சாந்தமாக ''ஐயா நானோ இலங்கையில் இருந்து வந்தவன். இந்தியா என்றால் பொண்டிச்சேரியும் சேர்ந்ததுதான் இந்தியா என்று நினைத்தோம். உள்ளே செல்லவிட்டதும் உங்கள் அரசாங் கம் தான். வெளியே செல்ல அனுமதிக்க வேண்டியவர் களும் நீங்கள் தான்'' என்றேன்.

''சுப்பிரமணிய பாரதியாருக்கும் பகவான் அரவிந்த ருக்கும் வ.வே.சு. ஐயருக்கும் புகலிடம் கொடுத்த பொண் டிச்சேரி ஒன்றும் அறியாத என்னை இப்படித் தடுக்க லாமா'' என்றேன். இதனை கண்ணுற்ற தலைமை அதி காரி நேராக எங்கள் இடத்திற்கு வந்தார். விஷயத்தை விசாரித்தார். ''இவரைத் தடுத்து என்ன செய்யப் போகின் றாய்? போக விடு'' என்றார். தப்பினேன் பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டே ஓடிச்சென்று புகையிரதத்தில் ஏறிக்கொண்டேன். அடியேனுடைய பிரயாணமும் தொடர்ந்தது.

அரவிந்த ஆச்சிரமத்திற்குள் போவதென்றால் இலே சான காரியம் அல்ல. உள்ளே போனாலே சுவாமிகளைத் தரிசிக்க முடியும். ஒரு கடிதத்தை எழுதி வாயிற் காவலரி டம் கொடுத்து இக்கடிதத்தை சுவாமி சுத்தானந்த பாரதி யாரிடம் கொடுத்து விடுங்கள் என்றேன். அவர் ஒரு வங் காளி. உடனே இது சுத்தானந்தருடைய ஆச்சிரமமா என்று கோபத்துடன் கேட்டார்.

''இல்லை ஐயா, இது பகவான் அரவிந்தருடைய ஆச் சிரமம் என்று தெரியும். அரவிந்த தரிசனத்திற்காகத் தான்

வந்தேன். உள்ளே செல்வதற்கு அனுமதி பெற வேண்டுமே. அதற்காகத்தான் சுத்தானந்த பாரதியாருக்குக் கடிதம் எழுதினேன். பகவான் அரவிந்தரைத் தரிசிப்பதற்குத் நீங்கள் உத்தரவு பெற்று, தருவீர்களானால் நான் இந்த நன்றியை என்றும் மறக்கமாட்டேன். நானோ சிலோனில் இருந்து பகவான் அரவிந்தரை தரிசிக்க வந்தேன் இச்சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் பகவானை எப்பவும் தரிசிக்க முடியாமல் போகலாம் அல்லவா?''

அவருடைய மனம் இளகியது போல் காணப்பட்டது. கடிதத்தை வாங்கினார். கடிதத்தை உடனே கொடுக்கமாட்டேன். நான் நினைத்தநேரம் தான் கொடுப்பேன் என்றார். நன்றி என்றேன். அவருடைய கண்காண ஒரு மர நிழலில் அமர்ந்தேன். அவரோ என்னைத் திரும்பிப் பார்ப்பதாகவே தெரியவில்லை.

இப்படியும் மக்கள் இருக்கிறார்கள் என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சி. அரவிந்த ஆச்சிரமத்தில் அரவிந்தருக்குப் பிறகு அதன் தலைவராக வரத் தக்க தகுதி உண்மையாகவே சுவாமி சுத்தானந்தருக்குத்தான் உண்டு. ஒரு தமிழர் தலைமை பெறுவதை ஆச்சிரமத்தில் உள்ள வங்காளிகள் விரும்பவில்லை.

அரவிந்தருடைய கருணையாலே தான் சுவாமி சுத்தானந்தர் 23 வருடங்கள் மோனத்தவம் புரிந்தார். அவர் அங்கே சும்மா இருக்கவில்லை. அரவிந்தருடைய நூல்களை எல்லாம் தமிழில் மொழிபெயர்த்ததோடு தமிழிலும் அங்கிருந்து கொண்டே நூற்றுக் கணக்கான நூல்களையெல்லாம் எழுதி வெளியிடமுடிந்தது. பாரத சக்தி மகாகாவியம் அங்கிருந்து உருவான நூல் தான். பாரத சக்தி என்ற பத்திரிகையும் அங்கிருந்தே வெளிவரச் செய்தார்.

வங்காளிகளுடைய பொறாமை அவருக்குப் பாலில் நஞ்சு கலந்து கொடுக்கச் செய்தது. குடித்த பாலில் நஞ்சு உள்ளது என்பதை அவர் அறிந்த உடனேயே 'நௌலி' என்ற யோகாசனத்தைச் செய்து குடித்த பால் முழுவதையும் சத்தி எடுத்து ஒருவாறு திருவருளால் அதன் தாக்கத்தினின்று தப்பினார். பகவான் அரவிந்தர் இதனை

அறிந்து சுத்தானந்தரை ஒரு வார காலத்திற்குத் தம்முட னேயே உடனிருத்தி வேண்டியவாறு சிகிச்சைகள் அளித்தார். இந்தப் பொறாமை என்பது சாமானிய மக் களுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. இதற்கும் பகவான் அரவிந்தருக்கும் எவ்வித தொடர்பும் இருக்க முடியாது என்பதை எல்லாரும் அறிவர். ஆனால் இப்படிப்பட்ட செயல்கள் பெரிய இடங்களுக்குள்ளும் புகுந்து விடுகின்றது என்பதை நினைக்கும்போதுதான் அவற்றை எம்மால் சீரணிக்க முடியாமல் இருக்கின்றது.

ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின்மீது பொறாமை கொண்டால் அச்சமூகத்தையே நிர்மூலமாக்கி அழித்துவிட எண்ணுகின்றது. நாம் உலகத்தில் வாழலாம். ஆனால் உல கத்தை நம்முள்ளே வாழவிடக் கூடாது என்பதையே இது காட்டுகின்றது.

சுத்தானந்தர் இதன் பிறகு வெளியேறி 'பாரதிமில்' என்ற இடத்திலே சில நாள் தங்கி இருந்தார். இப்பொழுது நமது விடயத்திற்கு வருவோம்.

அடியேன் மரநிழலில் இருந்தேன். அவ்வங்காளி திரும் பியே பார்க்கவில்லை. சுவாமி சுத்தானந்தரையே தியா னித்த வண்ணம் இருந்தேன். இத்தியான அலை அவரிடம் சென்று அடியேனை நினைவு கூரச் செய்யாதா என்ற எண்ணத்துடன்தான் இருந்தேன். அடியேனுடைய தியானம் வீண்போகவில்லை. கடவுள் நேராக வந்து அருள் பாலிப்பதில்லை. ஆனால் யாரோ ஒருவர் மூலம் தான் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

அடியேனை நோக்கி ஒரு தாடிக்காரர் வருவதைக் கண்டேன். அவருடைய பெயர் கங்காதரன் என்பது. பல கட்டுரைகள் ஆத்மஜோதியில் எழுதியுள்ளார். அடியேனை இன்னார் என்று அறிந்ததும் கட்டித் தழுவினார். அவர் கட்டித் தழுவுவதை அந்த வங்காளி உற்று நோக்குவதைக் கண்ணுற்றேன்.

கங்காதரன் அவர்கள் தான் நேராகச் சுத்தானந் தரிடம் சென்று விஷயத்தைக் கூறி உள்ளே செல்வதற்

குரிய ஆயத்தங்களைச் செய்து வருவதாகக் கூறினார். வங்காளி கங்காதரன் அவர்களிடம் அடியேன் கொடுத்த கடிதத்தைக் கையளிப்பதைக் காணமுடிந்தது. மனப்பாரம் ஒன்று இறங்கியதாக உணர்ந்தேன்.

கங்காதரன் அப்பால் சென்றதும் வங்காளி அடியேனை நோக்கி ஓடிவந்தான். தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். வங்காளி தன் கடமையைச் செய்தார் என்ற எண்ணம் மனதில் குடிகொண்டதால் அடியேன் அவரை மன்னிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கங்காதரன் அந்த வங்காளியிடம், ''இவர் இலங்கையில் சிறந்த பத்திரிகை ஆசிரியர். அரவிந்தரின் சீடர் என்றே கூறலாம். தனது பத்திரிகை மூலம் அரவிந்தருடைய உபதேசங்களை எல்லாம் பரப்புகின்றவர். உன்னிற் பார்க்க அவர் அரவிந்தர் மேல் பக்தி உடையவர். அரவிந்தருடைய குருபூசைத்தினம் அதாவது அவரது பிறந்ததினம் இலங்கையில் கொண்டாடப் படுகிறது என்றால் அதற்கு மூலகாரணர் இவர்தான்'' என்று கூறியிருக்கிறார். கங்காதரன் அவர்கள் கூறியசெய்தி வங்காளியின் மனத்தைத் தொட்டுவிட்டது. அதனாலேதான் ஓடோடியும் வந்து மன்னிப்புக் கோரினான்.

சிறிது நேரத்தில் கங்காதரன் அவர்கள் உத்தரவுப் பத்திரத்துடன் அடியேனை நோக்கி வந்தார்கள். கங்காதரனின் பின்னே வாயிலை அடைந்தேன். அந்த வங்காளி கை கூப்பி வணங்கி வரவேற்றார். அனுமதிப்பத்திரத்தைப் பார்க்கவும் இல்லை. அடியேனுடைய கைப்பெட்டியைப் பரிசோதித்துப் பார்க்கவும் இல்லை. சுத்தானந்தருடைய அருட்சத்தி வங்காளியையே முழுதாக மாற்றிவிட்டது.

சுத்தானந்தர் இருந்த அறையினுள்ளே சென்றேன். சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினேன். கையை உயர்த்தி மலர்ந்த முகத்துடன் ஆசிர்வாதம் செய்தார். அப்பொழுதும் மௌனம் கலையவில்லை. கருத்துப்பரிமாற்றம் எழுத்துமூலம் தான் நடைபெற்றது.

யாழ்ப்பாணத் தமிழை கேட்க ஆசையாக இருக்கிறது. ஏதாவது பேசுங்கள் என எழுதிக் காட்டினார். அவரை

நாடி வந்தபோது வழியில் ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றியும் ரமண விஜயத்தின் மகிமையைப் பற்றியும் பேசினேன்.

பதினைந்து நிமிடங்கள் வரை பேசியிருப்பேன். அப்பொழுது பாரதி சக்தி மகாகாவியம் அச்சாகிக் கொண்டிருந்தது. அதில் ஒரு பகுதி பிழை திருத்தத்திற்காக வந்திருந்தது. அப்பகுதியைப் பிழை திருத்துமாறும் பின் வாசிக்குமாறும் எழுதிக்காட்டினார். அடியேன் வாசித்தேன். நல்ல இனிமையாக வாசிக்கிறீர்கள் என்று எழுதிக் காட்டினார்கள்.

அந்த நேரத்திற் செட்டி நாட்டில் இருந்து நான்கு செட்டிப் பிள்ளைகள் வந்திருந்தார்கள். நால்வரும் வீழ்ந்து வணங்கி ஓரமாக இருந்தார்கள். சுவாமியினுடைய கட்டளைப்படி அடியேனை அறிமுகம் செய்யுமாறு கைச் சைகை காட்டினார்கள். அடியேனை அறிமுகம் செய்து வைத்தேன். அவர்களும் அடியேனுக்குத் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

சிறிது நேரத்தின் பின் செட்டிப் பிள்ளைகள் ஒரு செய்தியைக் கூறினார்கள். சுவாமி எங்களுடன் வாருங்கள். காவிரிக் கரையில் குளுகுளு என்று ஒரு ஆச்சிரமம் அமைத்துத் தருகிறோம் என்றார்கள். சுவாமிகள், ''ஆச்சிரமம் ஆகச் சிரமம் அல்லவா'' என்று எழுதிக் காட்டினார்கள். ''நான் காற்றுப் போல சுதந்திரமாக இருக்கவே விரும்புகிறேன். கட்டுப்பட்டிருப்பதை என்மனம் விரும்பவில்லை'' என்று எழுதிக்காட்டினார்கள்.

செட்டிப்பிள்ளைகள் வெளியே செல்லப் புறப்பட்டார்கள். அடியேனை அழைத்துச்சென்று உணவுண்ணச் செய்து மறுபடியும் கொண்டுவந்து விடுங்கள் என எழுதிக் காட்டினார்கள். அடியேனை அவர்கள் அழைத்துச் சென்று தங்களில் ஒருவனாகவே மதித்து அன்பு செய்து நல்விருந்தளித்து அடியேனை வாசல் வரை கொண்டு வந்து விட்டார்கள். வங்காளி முன்போல் இல்லாமல் வணங்கி 'வரவேற்று உபகாரம் செய்தார். இதனைக் கண்ணுற்ற செட்டிப்பிள்ளைகள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

அடியேன் சுவாமிகளுடைய அறையை அடைந்ததும் சுவாமி அரவிந்த தரிசனத்துக்குரிய அனுமதிப்பத்திரத்தை அடியேனிடம் அளித்து அரவிந்த தரிசனத்துக்குரிய வழி முறைகளை எல்லாம் எழுதிக்காட்டினார்கள்.

பகவான் அரவிந்தரை வருடத்தில் மூன்று தினங்கள் தான் தரிசனம் செய்யமுடியும். அவர் பிறந்த தினமாகிய ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி, ஆச்சிரமம் ஆரம்பித்த தினம், பகவானுடைய பரம பக்தையான பிரான்சு நாட்டு சிஷ்யை 'மீரா' அம்மையார் ஆச்சிரமத்திற்கு வந்ததினம் ஆகிய மூன்று நாட்களும்தான் அவரை எவரும் தரிசிக்க முடியும். அன்னை மீராவைத் தவிர மற்றைய ஆச்சிரம வாசிகள் அனைவருமே இந்த மூன்று நாட்களில் தான் பகவான் அரவிந்தரைத் தரிசிக்க முடியும்.

அடியேன் தரிசனைக்காகச் சென்ற தினத்தில் சுமார் ஐயாயிரம் பேர்வரை தரிசனைக்காகக் காத்து நின்றார்கள். அரவிந்த தரிசனத்திற்குக் கிடைத்த அனுமதிப் பத்திரத்தின் இலக்கம் 4779 ஆகும். அடியேனுக்குப் பின்னாலும் பலர் நிற்கிறார்கள். இதைக் கொண்டே ஐயாயிரம் பேர் வரை என்று அண்ணளவாகக் கூற முடிந்தது.

பகவானும் அன்னையும் ஒரு அறையினுள்ளே இரு அலங்கரிக்கப்பட்ட நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். அறை வாசலைக் கடந்து எவரும் உள்ளே செல்ல முடியாது. வாசலில் ஒரு கூடை வைக்கப் பட்டிருந்தது. யாராவது மாலையோ பூக்களோ சன்மானப் பொருட்களோ கொண்டு சென்றால் அந்தக் கூடையினுள்ளே வைத்துவிட்டு ஒரு கணப்பொழுது தரிசனத்துடன் அப்பாற் சென்று விடவேண்டும்.

அதன் பின் அடியேன் சுத்தானந்தருடைய அறைக்குச் சென்று எழுத்துமூலம் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். சுவாமிகளுக்கு யாழ்ப்பாணத் தமிழைக் கேட்க பேராவல் இருந்ததை உணர முடிந்தது. பல கேள்விகளை எழுதிக்காட்டி அடியேனை வெகுநேரம் பேச வைத்தார்கள். அடியேன் இசையறியேன். அடியேனைப் பாடவைத்

தார்கள். பாரதசக்தி மகா காவியத்தில் வரும் பல பாடல் களைத் திருப்பித் திருப்பிப் பாடுமாறு எழுதிக் காட்டி னார்கள். அவற்றுள் ஒருபாடல் பின்வருமாறு:

சீலத்தால் அறிவால் அன்புத்
 திறத்தினாற் பணியா லுன்னை
ஞாலத்தார் உணர்ந்து போற்றி
 நற்கதி அடைய வேண்டி
காலத்தால் அறியாச் செஞ்சொற்
 கவிதையாய் என்னுட் பேசாய்
பாலொத்த செய்ய மேனிப்
 பராசக்தி தாயே....

இப்படி அடியேனை நீண்ட நேரம் பேச வைத்தார்; பாட வைத்தார்.

அடியேனும் அவரது சந்நிதியில் இருந்து சந்நிதானப் பெருமையை உணர்ந்தேன்; அனுபவித்தேன். ரமணபக வானின் சந்நிதியில் ஒரு ஆத்மீக அலை வீசியதுபோல் சுவாமிகளுடைய அறையினுள்ளும் ஒரு ஆத்மீக அலை வீசுவதை உணர்ந்தேன். அவருடைய சந்நிதியில் இருக்கும் வரை அடியேனுடைய மனம் மிகமிக உயரப் பறந்து சென்றதை உணர்ந்தேன். இதுதான் சந்நிதானப் பெருமை போலும்.

''சுவாமி அடியேனை ஆசீர்வதியுங்கள். உங்கள் ஆசி யினால்தான் அடியேன் மக்களுக்குச் சேவை செய்யும் பாக் கியம் கிட்டவேண்டும்'' என்று அவரது பாதத்தில் வீழ்ந் தேன். எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தேனோ அறி யேன். சுவாமிகள் குனிந்து அடியேனுடைய தலையில் கை வைத்து எழுப்பினார்கள். சுவாமிகளுடைய ஸ்பரிசம் அடி யேன் உள்ளத்தில் மின்சாரம் போன்று பாய்ந்தது. இந்த ஸ்பரிசத்துக்காகத் தானே மகான்களைத் தேடி அலைந்தேன்.

ரமணபகவான் நயனதீட்சை தந்து அடியேனுடைய மானசகுரு ஆனார். சுவாமி சுத்தானந்தர் ஸ்பரிச தீட்சை தந்து அடியேனுடைய இரண்டாவது குரு ஆனார்.

# சாயி தரிசனம்

அடியேனுக்குச் சத்திய சாயி பாபாஜியை அறிமுகம் செய்து வைத்தவர் கலிபோர்ணியாவைச் சேர்ந்த செல்வி சாள்ஸ் ஹில்டா என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இதுதான் உண்மை.

பரமஹம்ச யோகானந்தர் வட இந்தியாவைச் சேர்ந் தவர். இவருக்கு அமெரிக்காவில் ஏழு ஆச்சிரமங்கள் உள்ளன. இவற்றில் ஒன்றுக்குத்தான் ஹில்டாவின் தந்தையார் தலைவராக இருந்தார்.

ஒருநாள் தந்தையாருடன் ஹில்டா ஆச்சிரமம் சென்றார். பரமஹம்ச யோகானந்தரிடம் என்னையும் உங்கள் சீடர்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார். அதற்குச் சுவாமிகள் ''நான் உனக்குக் குரு அல்ல உனது குரு இந்தியாவில் இருக்கிறார்'' என்றார். அத்துடன் ஹில்டா வீடு திரும்பிவிட்டார்.

ஆறு மாதங்களின்பின் ஹில்டா ஒரு கனவு கண்டார். அக்கனவில் சாயி பாபாஜி தோன்றினார். தான் கனவில் கண்டவர் சாயி பாபா என்பதை அவர் அறியார். ஆனால், கனவிற் கண்ட திரு உருவமோ உள்ளத்தில் தெளிவாக இருந்து வந்தது.

ஒரு நாள் ஹில்டா தந்தையாரிடம் நான் எனது குருவைத் தேடிச் செல்கின்றேன் என்றார். ஊர்பேர் ஒன்றுந் தெரியாது நீ எப்படி உனது குருவைக் கண்டு பிடிப்பாய் என்றார்? எப்படியோ குருநாதன் வழி காட்டுவார் என்று கூறிப் பிரயாணத்தை மேற்கொண் டார். இவர் விமானத்தை விட்டு பம்பாயில் இறங்கி

ஹோட்டல் ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்தார். அங்கே சுவாமிகள் பெரிய கூட்டம் ஒன்றில் அருளுரை வழங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். சுவாமிகளுடைய பேச்சு முடியும்வரை காத்திருந்து பேச்சு முடிந்ததும் அவரை நாடிச் சென்றார். சுவாமிகள் இவரைப் பார்த்த உடனேயே இவர் வாய் திறக்குமுன், 'எல்லாம் தெரியும். நீ புட்டபர்த்திக்குச் செல். நான் அங்கு வருகிறேன்' என்றார். மாதக் கணக்காக ஆச்சிரமத்திலேயே தங்கி இருந்து சாதனைகள் செய்தார்.

1960ஆம் ஆண்டு என்று நினைவு. சுவாமி இராமதாசரும் அன்னை கிருஷ்ணாபாயும் உலகச் சுற்றுப்பிரயாணத்தின் போது ஆத்மஜோதி நிலையத்திற்கும் வந்தனர். அன்றுகாலை ஏழேகால் மணிக்குச் சுவாமிக்குப் பாதபூஜை ஆத்மஜோதி நிலையத்தில் செய்யப்பட்டது. சுமார் ஏழு மணிக்கு ஒரு வெள்ளைக்கார அம்மையார் வந்தார். ஒரு பக்கத்தில் தியானத்தில் அமர்ந்தார். பாத பூஜையில் பங்கு கொண்டார். சுவாமிகளின் அருளுபதேசங்களை எல்லாம் செவி மடுத்தார். கூட்டம் கலைந்தது. அவரும் சென்று விட்டார். நாவலப்பிட்டி நகரைச் சூழத் தேயிலைத் தோட்டங்கள் பல இருந்தன. தோட்ட மேற்பார்வையாளர்களாக வெள்ளைக்காரத் துரைமார் இருந்த காலம். அவர்களில் ஒருவராக இந்தப் பெண்மணி இருந்திருக்கலாம் என அடியேன் எண்ணினேன்.

ஐந்து ஆறு ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் கற்றனிலிருந்து திருமதி விஜயரத்தினம் அம்மையார் தொலைபேசி மூலம் தமது வீட்டிற்கு ஒரு வெள்ளைக்கார அம்மையார் வந்திருப்பதாகவும் அவரை அடியேன் அவசியம் பார்க்க வேண்டும் என்றும் கூறினார்கள். அடியேன் அங்கு சென்றதும் அந்த அம்மையாருக்கு திருமதி விஜயரத்தினம் அம்மையார் அறிமுகம் செய்தார்கள். அந்த அம்மையார் உடனே தான் எமது இல்லத்திற்கு வந்ததாகக் கூறினார்கள். அடியேனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அம்மையார் உடனே சுவாமி ராமதாசரை நினைவூட்டினார்கள். அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது.



பகவான் ஸ்ரீ சதய் சாயிபாபா

சம்பாஷணை தொடர்ந்தது. அம்மையார் சத்தியசாயி பாபாவைப் பற்றியும் தான் யார் என்பது பற்றியும் குறிப் பிட்டார்கள். தாம் சுவாமியைத் தரிசித்து மீண்டபோது சுவாமிகள் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்ட போதுதான் கேட்டவற்றையும் அவை கிடைத்த வகையையும் விபரித்தார்கள். அவற்றில் 101 படங்கள் அவரிடம் காணப்பெற்றன. ஒரு படத்தைத் தாருங்கள் ஆத்மஜோதியில் வெளிவரச் செய்வோம் என்றேன். அதற்கு அவர் மறுத்து விட்டார். இப்படங்கள் சுவாமிகளால் தரப்பட்டவை. இவற்றைக் கொடுக்க விரும் பவில்லை. அவரது சுயசரித்திரம் இருக்கிறது. அதனைப் பயன்படுத்துங்கள் என்று கூறி ஆங்கிலத்தில் ஒரு புத்தகத்தைத் தந்தார்கள். அதன் உதவி கொண்டு ஆத்மஜோதியில் சுவாமிகளுடைய படத்துடன் சுவாமிகளுடைய வாழ்க்கைக் குறிப்பையும் வெளியிட் டோம். அவ்வெளியீட்டில் பத்துப்பிரதிகளை அடியேன் புட்டபர்த்திக்கு அனுப்பிவைத்தேன். ஹில்டா அம்மை யார் புட்டபர்த்தியில் இருக்கும்போதே இப்புத்தகங்கள் அங்கு சேர்ந்தன. அது பற்றிய வரலாற்றை அம்மையார் சுவாமிகளுக்குக் கூறத்தொடங்கினார். சுவாமிகள் இடை மறித்து அவை எல்லாம் தெரியும் என்றார். இச்செய்தியை அம்மையார் அவர்கள் கலிபோர்ணியாவில் இருந்து கடித மூலம் அறிவித்திருந்தார்கள்.

இச்செய்தி அடியேனுடைய உள்ளத்தில் ஒரு கிளர்ச் சியை ஏற்படுத்தியது. சுவாமிகளுக்கு எங்களைப் பற்றியெல்லாம் தெரிந்திருக்கிறதே என்று ஆச்சரியப்பட் டேன். பகவான் எங்கும் இருக்கிறார். எங்கும் உள்ள வருக்கு எல்லாம் தெரிந்து தானே ஆக வேண்டும். ஆகவே சாயிபாபா அவதார புருஷர் மாத்திரம் அல்ல பகவானே தான் என்ற உறுதிப்பாடும் மனதில் உதயமானது. பக வானைத் தரிசிக்க வேண்டும் என்ற அவாவும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.

நாங்கள் ஆறுபேர் சேர்ந்து தென் இந்திய தலயாத் திரையை மேற்கொண்டோம். அத்தல யாத்திரையில் முக்கி யமானது சாயிப்பாபா அவர்களின் தரிசனமாகும்.

ஆறுபேரில் மூவர் பெண்கள் மூவர் ஆண்கள். திருச்சியிலிருந்து புட்டபர்த்திக்கு ஒரு மோட்டாரிற் புறப் பட்டோம். வழியிற் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டே சென்றோம். புட்டபர்த்தி பங்களூரில் இருந்து 108 மைல் தூரத்தில் உள்ளது என்பது மாத்திரம்தான் தெரியும். புட்டபர்த்திக்குப் பங்களூருக்குச் செல்லாமல் வேறு வழியிலும் போக மார்க்கம் இருக்கலாம் என்ற எண்ணம் எழுந்தது. அந்த எண்ணம் எழுந்த சில நிமிடங் களுக்கெல்லாம் தெருவோரமாக விபூதிக் கோலத்துடன் ஒருவர் நிற்பதைக் கண்டோம். மோட்டாரை மறித்து புட்ட பர்த்திக்குச் செல்லும் மார்க்கம் எது என்று கேட்டோம். அவர் உடனே சாயி பாபாவிடம் தானே போகிறீர்கள் என்றார். ஆம் என்றோம். ''இங்கிருந்து இரண்டு மைல் தூரம் சென்றீர்களானால் ஒரு சந்தி வரும். அதனை 'வைற்வீல்ட்' என்று அழைப்பார்கள். அங்கிருந்து இடது பக்க றோட்டிற் சென்றால் ஒரு புகையிரத நிலையக் கேற்றுக்கு முன்பாக பிருந்தாவனம் என்று எழுதப்பட்ட ஒரு இடத்தைக் காண்பீர்கள். அங்கே சுவாமிகள் இருக் கிறார்'' என்று கூறினார்.

இவற்றைக் கேட்டு மோட்டார் புறப்படுவதற்கு முன் பாகவே செய்தி சொன்னவர் மறைந்துவிட்டார். பாபாவே தான் இப்படி வந்து பாதையும் காட்டிச் செய்தியும் சொன் னார் என்றால் பலர் நம்ப மாட்டார்கள். நமது கூட்டத் தில் வந்தவர்களும் முற்று முழுதாக நம்பிவிடவில்லை. இதனைச் சுவாமிகளே அவரது முதற் சந்திப்பின்போது சுட்டிக் காட்டினார்கள்.

வழி காட்டியவர் கூறிய படியே சென்றோம். பிருந் தாவனத்தினுள் நுழைந்தோம். அங்கு நூற்றுக்கணக்கான பெண்கள் ஒரு பக்கத்திலும் நூற்றுக்கணக்கான ஆண்கள் மறுபக்கத்திலும் நிற்கக் கண்டோம். பெண்கள் பெண் களுடனும் ஆண்கள் ஆண்களுடனும் சேர்ந்து கொண் டோம். அடியேன் பக்கத்தில் நின்ற ஒருவரிடம் எதற்காக இங்கே நிற்கறீர்கள்? என்று கேட்டேன். சுவாமிகள் வந்தி ருக்கிறார்கள். அவர்களுடைய தரிசனை இப்போ கிடைக்

கும். நீங்கள் பாக்கிய சாலிகள் என்று கூறி முடிப்பதற்கிடையில் சுவாமிகள் கேற்றைத் திறந்து கொண்டு எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தார். நாங்கள் எல்லோரும் வீழ்ந்து வணங்கினோம். சுவாமிகள் கை உயர்த்தி ஆசிர்வதித்துக் கொண்டே வந்தார்கள். எம் முடன் வந்த அம்மையார் சுவாமி கொஞ்சம் விபூதி தாருங் கள் என்று கேட்டார். சுவாமிகள் கையை அசைத்து விபூ தியை உண்டாக்கிப் பக்கத்தில் நின்ற சிலருக்குக் கையில் விபூதியைக் கொடுத்து வந்து அடியேனுடைய நெற்றியிலும் இட்டார்கள்.

நாம் முற்பிறப்பில் என்ன தவம் செய்தோமோ என்று தான் சொல்லத் தோன்றியது. சுவாமி தரிசனமும் சுவாமி யின் கரம் தீண்டப்பெற்ற ஸ்பரிசமும் கிடைத்தன. இதற்கு மேல் வேறு என்ன தான் வேண்டும்? மனத் திருப்தியோடு இருக்கும் நிலையில் சுவாமிகள் திரும்பவும் வந்தார்கள். வரும்போது ஒரு பிளாஸ்ரிக் பையினுள் மடித்த விபூதி சரைகள் கொண்டு வந்து அள்ளி அள்ளிக் கொடுத்தார் கள். வீட்டிற்குக் கொண்டு போவதற்கும் விபூதிப் பிர சாதம் கிடைத்து விட்டது. இதற்குமேல் எதுவுமே தேவையாக இருக்கவில்லை.

சிறிது நேரத்திற் சுவாமியின் பிரத்தியேகக் காரிய தரிசி கேற்றில் வந்து இலங்கையில் இருந்து வந்த ஆறு பேரையும் சுவாமி அழைக்கிறார் என்று குரல் கொடுத் தார். வேறுயாரும் செல்லாத படியினால் நாங்கள் ஆறு பேரும் சென்றோம்.

ஒரு சிறிய அறை. அந்த அறையினுள்ளே ஒரு சாய் மனை நாற்காலி. சுவாமிகள் அறையினுள்ளே உலவிக் கொண்டு நின்றார். நாங்கள் ஆறு பேரும் வணங்கினோம். சுவாமிகள் கையை உயர்த்தி ஆசிர்வாதம் செய்தார்கள். சுவாமி பக்தியைப் பற்றி 15 நிமிடம் வரை பேசினார்கள். ஈற்றில் அடியேனைப் பார்த்து ''மக்களுக்கு இன்று கடவுள் நம்பிக்கை இல்லை, பக்தியுமில்லை. நீ சென்று நம்பிக்கை யைப் பற்றியும் பக்தியைப் பற்றியும் பேசு, எழுது'' என்று ஆசீர்வதித்தார்கள். அவருடைய ஆசி வீண்போகவில்லை.

அவருடைய ஆசிதான் இன்று உலகம் முழுவதும் பேசவும் எழுதவும் வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. முத்தி பெறு வதற்கே குருவினுடைய ஆசிதான் வேண்டும் என்றால் குரு வின் பெருமையை யாரால் தான் கூறமுடியும்?

''தியான மூலம் குரோர் மூர்த்தி
பூஜா மூலம் குரோர்ப் பதம்
மந்திர மூலம் குரோர் வாக்கியம்
மோட்சா மூலம் குரோர்க் கிருபா.''

அதாவது தியானத்திற்கு மூலம் குருவின் திருஉருவம். பூஜைக்கு மூலம் குருவினுடைய திருவடி. மந்திரத்திற்கு மூலம் குருவின் உபதேசம். மோட்சத்திற்கு மூலம் குரு வின் கருணையாகும். குருவின் கருணை எதைத்தான் செய் யாது.

நாங்கள் வீழ்ந்து வணங்கினோம். சுவாமியினுடைய உத்தரவுக்காகக் காத்து நின்றோம். சுவாமி திடீரென, ''நீங்கள் புட்டபர்த்திக்குப் போகத்தானே வந்தீர்கள்'' என் றார். நாங்கள் ஆம் என்றோம். ''நீங்கள் அங்கே செல்லுங் கள். நான் அங்கு வருகின்றேன்'' என்றார்.

சுவாமியினுடைய இனிய ஓசையைப் போன்று அடி யேன் இதுவரையிலே யாரிடமும் கேட்டதில்லை. அவருடைய பேச்சு ஓசை இசை போன்றே இருந்தது. இசை என்றால் இறைவனோடு இசைவிப்பது என்பது பொருள். இறைவனே நம் முன் ஊனக்கண் காண நின்றார். அவர் வாய் திறந்தால் எப்படியிருக்கும். இறைவனையே மானிட உருவில் கண்டோம். பிரியாமல் பிரிந்து சென்றோம்.

நேராக மைசூர் சென்றோம். பார்க்க வேண்டிய தெல்லாம் பார்த்தோம். மறுநாள் காலை புட்டபர்த்தி நோக்கி பிரயாணமானோம். பங்களூரைக் கடந்து புட்டபர்த்தி நோக்கி எமது மோட்டார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. முக்கால் பங்கு தூரம்வரை சென்றிருப் போம். ஒரு புகையிரதக் கடவையைக் கடக்க வேண்டி யிருந்தது. கேற் மூடியிருந்தது. கடவைக் காவலாளி

ஓடிவந்து சுவாமி இப்போதான் 10 நிமிடங்களுக்கு முன் பாகச் சென்று கொண்டிருக்கிறார். நீங்களும் நேரத்தோடு செல்லுங்கள் என்று கூறினார். இதுவும் சுவாமிகளுடைய ஆசிதான் என்று நினைத்தோம்.

நாங்கள் புட்டபர்த்தி சென்று சேர்ந்தோம். பிரசாந்தி மண்டபத்தின் வெளி விறாந்தையில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. நாங்களும் அவர்களுடன் சென்று உட்கார்ந்தோம். அரை மணித் தியாலம் கழித்து சுவாமியினுடைய பிரத்தியேகக் காரியதரிசி கஸ்தூரி அவர்கள் எங்கள் முன்னே தோன்றி, ''சுவாமி இப்போதான் வந்திருக்கிறார். நன்கு களைத்திருக் கிறார். இன்றைக்கு 'இன்ரவியு' இல்லை. நாளைக்காலை தான் நடக்கும். ஆதலால் எல்லாரும் பிரசாந்தி மண்டபத் திற்குப் பிரார்த்தனைக்குச் செல்லுங்கள்'' என்றார்.

அதன் பின்தான் நாங்கள் ஒரு அறை எடுத்து எமது சாமான்களை எல்லாம் அறையில் வைத்துவிட்டுக் கால் முகம் கழுவிப் பிரார்த்தனைக்காகப் பிரசாந்தி மண்டபம் சென்றோம். மண்டபம் நிறைந்த மக்கள். சரியாக ஆறு மணிக்குப் பிரார்த்தனை ஆரம்பமானது. இராக தாளம் தவறாத இனிய இசையில் மிதந்தோம். ஆறே முக்கால் மணிக்குப் பகவான் வந்தார். எங்களோடு பஜனையில் கலந்து கொண்டார். பகவானுடைய சிம்மக் குரல் பஜனை ஒலிக்கு மெருகூட்டியது. மணி ஏழுக்குச் சரியாக தீபாராதனை நடந்தது. பகவானே அதனை நடத்தி வைத்தார். பூஜைபெற வேண்டிய பகவானே பூஜையைச் செய்தார் என்றால் அதன் மகிமையைக் கூறவும் வேண்டுமா.

அடுத்தநாள் காலையில் பிரசாந்தி மண்டபத்தில் வழக்கமாக நடைபெறும் பஜனை முடிந்தபின் சுவாமி களுடன் நேர்முகமாகப் பேசுவதற்காக அடியார்கள் அமர்ந் திருந்தனர். நாமும் அவர்களுடன் சேர்ந்து அமர்ந்திருந் தோம். ஏழுமணி தொடக்கம் பத்து மணிவரை நேர்முக அழைப்பு நடந்து கொண்டே இருந்தது. ஆனால் நாங்கள் அழைக்கப்படவில்லை. நேரம் பத்தரை இருக்கும் நாங்கள் ஆறுபேரும் விறாந்தையின் முற்றத்தில் ஒன்றுகூடி

நின்றோம். சுவாமி புட்டபர்த்தியைப் பார்க்கத்தான் அழைத்தார். நாங்கள் பார்த்துவிட்டோம். இனிமேல் போகலாம் தானே என்றார்கள். இல்லை, சுவாமி அழைத்ததில் ஏதோ காரியம் இருக்க வேண்டும். இன்று மாலையும் பார்ப்போம் அழைக்காவிட்டால் நாளை சுவாமிகள் இந்தப்பக்கம் வரும்போது நாங்களாக விடைபெற்றுக் கொண்டு செல்லலாம் என்று பேசிக் கொண்டிருக்கையில் சுவாமிகள் கதவைத் திறந்து கொண்டு எங்களை நோக்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தோம். சுவாமிகள் கிட்ட வந்ததும் வணங்கினோம். எப்போ போகிறீர்கள் என்று சுவாமிகள் கேட்டார்கள். அடியேன் ''சுவாமி வரச் சொன்னீர்கள் வந்தோம். எப்போ போகச் சொல்லுகிறீர்களோ அப்போ செல்வோம்'' என்றேன். சுவாமி அடியேனுடைய முதுகில் தட்டி இன்று நான்கு மணிக்கு இன்ரவியூ என்றார்கள். நாங்கள் அவ்விடத்தை விட்டகன்று மதிய போசனத்தை முடித்துக் கொண்டு சிரமபரிகாரம் செய்து மூன்று மணியளவில் வந்தோம். மக்கள் கூட்டம் பெரிதாகக் காணப்பட்டது. நாங்கள் ஆகக் கடைசியில் தான் இருந்தோம்.

சுவாமிகள் சரியாக நான்கு மணிக்கு வந்தார்கள். சுவாமிகளுடைய கண்கள் எங்களைத் தேடிக் கொண்டிருப்பதை உணர்ந்தோம். எழும்பி நின்றோம். கையைக் காட்டினார். நாங்கள் எழுந்து சென்றோம். முதல்வரிசையில் இருக்குமாறு கட்டளை இட்டார்கள். எங்களுக்குத் தான் முதலில் இன்ரவியூ நடந்தது. எங்களுடன் எங்கள் கார்ச் சாரதியும் வந்திருந்தார். நாங்கள் ஆறு பேரும் உள்ளே சென்றபின் உனக்கு இன்ரவியூ இல்லை என்றார்கள். கார்ச்சாரதி, ''சுவாமி இவர்களையெல்லாம் நான்தான் அழைத்து வந்தேன். ஆதலால் நானும் வருகிறேன்'' என்றான்.

சுவாமி சிரித்துவிட்டு அவரையும் உள்ளேவிட்டு முதலில் அவருக்குத்தான் இன்ரவியூ நடத்தினார்.

''நீ ஒரு கோயில் கும்பிடாத பக்தன். நீ ஒரு வேலைக்கு மனுப் பண்ணி இருக்கிறாய். அது கிடைக்கும்.

அது கிடைத்தபின் சந்தோஷமாக இருப்பாய்'' என்று கூறினார்.

எங்கள் கார்ச்சாரதியின் பெயர் இராஜ கோபாலன் என்பது. அவர் ஒரு நல்ல குணசாலி. நாங்கள் தங்கும் இடங்களில் எங்கள் பெட்டி படுக்கைகள் எல்லாம் அவராகவே எடுத்துக் கொண்டு வந்து தருவார். நாங்கள் எல்லாரும் ஏறி அமர்ந்ததன் பின் கதவுகள் சரிபார்த்து அதன் பின் தன்னுடைய சாரதி ஆசனத்தில் அமர்ந்து 'ஸ்ரயறிங்' கைத் தொட்டுக் கும்பிட்ட பின்தான் மோட்டாரைச் செலுத்துவார். ஆனால் எந்தக் கோயிலுக்குள்ளும் வந்து கும்பிட்டதில்லை.

பின்னி என்ற கொம்பனியினர் விற்பனை வான் ஒன்றுக்கு சாரதி ஒருவர் தேவை என விளம்பரம் இருந்தது. அதற்கு மனுப் பண்ணியுள்ளார். சுவாமி கூறியபடி தனக்கு வேலை கிடைத்ததாகவும் தான் இப்போது சந்தோஷமாக இருப்பதாகவும் பின்பு கடிதம் எழுதியிருந்தார்.

தம்பியாரைப் பார்த்து நீ ஏன் உனது உபாசனா மூர்த்தியை மாற்றினாய் என்று கேட்டார். அதன் பின்பு தான் தம்பியார் தான் சிவஉபாசனை செய்து வந்ததாகவும் தற்போது தான் முருக உபாசனையாக மாற்றியதாகவும் கூறினார். சுவாமிதானே எல்லாவற்றையும் நுட்பமாக அறிகிறார் என்றால் அதன் கருத்து அவர் எங்கும் இருக்கிறார், அவரே அகண்டமாக இருக்கிறார் என்பது தான்.

சுவாமிகள் அகண்டமானவர்; அவரது மேன்மையையோ சக்தியையோ யாரும் அளவிட்டுரைக்க முடியாது.

''வாசித்துக் காணொணாதது
பூசித்துக் கூடொணாதது
மாசற்றுத் தேறொணாதது ''

என்ற அருணகிரியார் வாக்கிற்கு இலக்கியமாகத் திகழ்கின்றார்.

# யோக தரிசனம்

யாழ்ப்பாணத்திலுள்ள சிவயோக சுவாமிகளை எல்லோரும் யோகர் சுவாமிகள் என்று அன்புடனும் மரியாதையுடனும் அழைப்பர். இவரது குரு செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளை விசர்ச் செல்லப்பர் என்று அழைப்பர். அவர் தன்னை மற்றையோருக்குக் காட்டிக் கொள்வதில்லை. உலகத்தவருக்கு விசரன் போலவே நடிப்பார்.

''காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனதிற் பற்றார்
தாமரையிலை போற்சகத் தொடுங்கூடிவாழ்வார்
பாமரரெனக் காண்பிப்பார் பண்டிதத் திறமைகாட்டார்
ஊமமருமாவார் உள்ளத்துவகையாம் ஜீவன்முத்தர்''

என்பது கைவல்ய நவநீதம் என்ற நூலில் ஒரு பாடல். உலகத்து மக்களினின்று தப்புவதற்காக ஞானிகள், மகான்கள் இப்படி ஒரு வேடத்தில் நடிப்பதுண்டு. செல்லப்ப சுவாமிகளும் இந்த வேடத்தில் நடித்தார். இவரை உள்ளவாறு அறிந்தவர் இருவர் மாத்திரமே. ஒருவர் செல்லப்பரின் குருநாதராகிய கடையிற் சுவாமிகள். அடுத்தவர் செல்லப்பரின் ஒரே ஒரு சீடராகிய சிவயோக சுவாமிகள்.

ஒருமுறை செல்லப்பர் தனது கூட்டாளிகளோடு நல்லூர்த் தேரடியில் இருந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அவர்களுக்குள்ளே ஒருவர், சுவாமி கஞ்சி குடிக்க ஆசையாயிருக்கு என்றார். உடனே செல்லப்பர், ''அந்த ஆசையையும் இன்றோடே தொலைத்துவிட வேண்டும். அதை வளர விடக் கூடாது. இது என்ன பிரமாதம்? நீ போய் அரிசி தேடிக் கொண்டு வா. நீ போய் பானை

தேடிக் கொண்டுவா. நீ போய் விறகு கொண்டு வா'', என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கட்டளை பிறப்பித்தார். எல்லோருக்கும் கஞ்சி குடிக்கும் ஆசை பிறந்து விட்டது. அந்த ஆசையைச் சுமந்து கொண்டே தமக்கிட்ட கட்டளையைக் கச்சிதமாகச் செய்து முடித்தனர். செல்லப்பர் தான் சும்மா இருக்கவில்லை. மூன்று கல்லுத்தேடி அடுப்பை ஆயத்தப்படுத்தினார். வழியால் ஒரு அம்மையாரை அழைத்து ''எடியே சுண்டு உப்புக் கொண்டு வாடி'' என்றார். அந்த அம்மையாரும் அவ்வண்ணமே எல்லோருக்கும் முதலாகவே உப்பைக் கொண்டு சேர்த்து விட்டார். அம்மையார் தன்வழியே சென்றுவிட்டார். செல்லப்பர் பாடத் தொடங்கி விட்டார்.

''அடுப்பும் உப்பும் இருந்தால்
அனைவருமே கஞ்சி குடிப்பார்.''

இப்பாடலைக் கேட்டுக் கொண்டே தத்தமக்கிட்ட வேலைகளை அவரவர் செய்து கொண்டிருந்தனர். அரிசி வெந்து கொண்டிருந்த சமயம் ஒருவரை அழைத்து எல்லோரையும் கண்மூடச் செய்து இந்தக் கடுதாசிக்குள் இருப்பதைக் கண்ணைமூடிக் கொண்டே பானைக்குள் போட்டுவிட வேண்டும் என்றார்.

அவர் செல்லப்பரின் கட்டளையை அப்படியே நிறைவேற்றிவிட்டார். அரிசி நன்கு வெந்து வருகிற சமயம் ஒரு சுகந்த மணம் வீசியது. கஞ்சி குடிக்க வேண்டும் என்று கேட்டவருடைய உள்ளத்தில் இப்ப வல்லவோ கஞ்சிகுடிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

உனக்கு அவ்வளவு அவசரமோ என்று செல்லப்பர் எழுந்தார். கையிலிருந்த தடியால் கஞ்சிப் பானைக்கு ஒருபோடு போட்டார். ''கஞ்சியும் போச்சு; பானையும் போச்சு; கஞ்சி குடிக்கிற ஆசையும் போச்சு'' என்று செல்லப்பர் கூத்தாடினார். மற்றவர்கள் சும்மா இருப்பார்களா? எல்லாரும் எழுந்து செல்லப்பரோடு கூத்தாடினார்கள். ஆட்டத்திற்கேற்ற பாட்டு.

''கஞ்சியும் போச்சு; பானையும் போச்சு; ஆசையும்
போச்சடி சின்னத்தங்கமே தங்கம்.''



தவத்திரு சிவயோக சுவாமிகள்

வழியால் போனவர் வந்தவர்கள் எல்லாரும் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டனர்.

செல்லப்பர் எழுந்தார் தடியைச் சுழற்றினார். விசரன்கள் கூத்தாடுகிறான்கள். உங்களுக்கிங்கே என்ன வேலை என்று தடியைச் சுழற்றினார். வேடிக்கை பார்த்தவர் எல்லோரும் ஓடி மறைந்து விட்டனர்.

இந்தச் செய்தியை அடியேனுக்கு ஒரு அம்மையார்தான் சுவாரசியமாகக் கூறினார். செல்லப்பர்தான் மறைந்து விட்டார். அவரது சீடன் யோகர் சுவாமிகளை யாவது தரிசிக்க வேண்டாமா என்ற ஆவல் ஒன்று எழுந்தது. அது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது.

யோகரைப் பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். அவர் ஒரு பணக்காரச்சாமியார். பணக்காரரைத் தேடிக் கொண்டுதான் செல்வார். இன்னொரு பகுதியார் போனால் மனுசன் தூஷணத்தால் ஏசிக்கலைப் பார் என்று கூறினர். வேறொரு பகுதியினர், ''நாங்கள் ஏதாவது சாத்திரம் கீத்திரம் என்று கேட்டால் ஒன்றுமே பேசாது சும்மா சிரித்துக்கொண்டே இருக்கும். மணித்தியாலக்கணக்கில் இருந்துவிட்டு எழுந்து வந்து விடுவோம்'' என்றனர்.

இப்படிப் பலரும் கூறியதை வைத்துக்கொண்டு ஒரு புராணமே எழுதி விடலாம் போன்றிருந்தது. இவற்றையெல்லாம் கேட்கக் கேட்க அடியேனுக்கும் ஆர்வம் மீதூர்ந்தது. அடியேனுக்கு ஒரு மைத்துனர். அவர் ஒரு டாக்டர். சுத்த பிரம்மச்சாரி. பெயர் சுப்பிரமணியம்.

இவரிடம் அடியேனுடைய ஆசையைத் தெரிவித்தேன். அதற்கு அவர் ''யோகரை மருதனாமடத்துச் சந்தியிலும் சந்திக்கலாம், பட்டணத்துச் சிவன் கோயில் வாசலிலும் சந்திக்கலாம், ஸ்ரீலங்காப் புத்தகசாலையிலும் சந்திக்கலாம். இந்த இடங்களில் சந்திக்காவிட்டால் கொழும்புத்துறையில் சந்திக்கலாம்'' என்றார்.

ஒருநாள் அதிகாலையிலே எழுந்து குளித்து நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்குப் போவது போலவே மனதைத் தயார்ப்படுத்திக் கொண்டு மருதனாமடம் சென்றேன்.

சிறிதுநேரம் ஒரு கல்லின் மீது அமர்ந்தேன். ஒரு பெரிய வர் வந்தார். ஏன் தம்பி இருக்கிறாய் என்றார். யோகர் சுவாமிகளைப் பார்க்கலாம் என்றிருக்கிறேன் என்றேன். அவர் எந்தநாள் எந்த நேரம் வருவார் என்று கூறமுடியாது என்றார்.

அவர்தான் பட்டணம் போவதாகக் கூறினார். அடியேனும் அவருடன் பேசிப் பேசி நடந்தேன். சிவன் கோயி லினுள்ளே நுழைந்து சுவாமி தரிசனம் செய்தேன். அங்கும் அவரைக் காணவில்லை. சிறிது நேரத்தின்பின் ஸ்ரீலங்காப் புத்தக சாலைப் பக்கம் போனேன். புத்தக சாலை அதிபர் முகமலர்ந்து வரவேற்றார். ''சுவாமிகள் உங்களைத்தான் இவ்வளவும் எதிர்பார்த்திருந்தார். ஒரு மோட்டார் வந்தது. ஏறிச் சென்று விட்டார். முத்தையன் வந்தால் அவனை வீட்டுக்கு வரச்சொல் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்'' என்றார்.

அடியேனுக்கு வானம் பூமி எல்லாமே சுழன்றன. நினைந்து நினைந்து உருகினேன். அடியேனுடைய பெயரை அவர் அறிந்திருக்க முடியாதே. வேறோர் முத்தை யாவாகவும் இருக்கலாம் அல்லவா? யாராய் இருந்தா லென்ன? இன்று எப்படியும் அவரது தரிசனம் கிடைக்கப் போகிறது என்ற ஆவலில் ஒட்டமும் நடையுமாகச் சென் றேன். அடியேன் எதிர்பார்த்த வண்ணம் சுவாமிகள் தனி மையில் இருந்தார். சாஷ்டாங்கமாக வீழ்ந்து அடியேனை அவரது பாதங்களில் சரண் அடையச் செய்தேன். கண்ணீர் வார எழுந்து நின்றேன்.

''கிணறுகாவி வந்து விட்டியோ காணும்'' என்றார். அப்போதான் சுவாமி அடியேனைப் பற்றியும் அறிந்துள் ளார் என்றுணர முடிந்தது. ''இருங்காணும்'' என்றார். இருந்தேன். ''கிணறு காவப் போகவில்லையோ காணும்'' என்றார். அடியேன், ''இப்போ கோடைகாலம் சுவாமி, மாரிக் காலத்தில்தான் சுவாமி கிணறுகள் காவி நிறமாய் இருக்கும்'' என்றேன்.

''எடே, உனக்கும் ஊரபிமானம் இருக்கோ?'' என்றார். அவரே பின்னும்

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே''
என்றுகூறி ஊரபிமானம் இருக்கத்தான் வேண்டும் என்றார். அடியேன் மௌனியானேன்.

சிறிதுநேரம் பலப்பல பேசினோம். சுவாமிகள் இருந்தாற்போல் பெரிய சத்தத்தில் ''ஓய் வாறாங்கள் காணும்'' என்றார். அடியேன் பயந்தே போய்விட்டேன். ''ஓய், சிவ புராணம் படிப்போம் காணும்'' என்றார். அடியேனும் தலை அசைத்தேன். திருவாசகப் புத்தகம் ஒன்றை அடியேனுடைய மடியில் போட்டார். சிவபுராணத்தை இருவரும் சேர்ந்தே படிக்கத் தொடங்கினோம்.

சிவபுராணத்திற் பாதி முடிந்திருக்கும். ஒரு மோட்டாரிலிருந்து ஒரு குடும்பம் இறங்கி வந்து சுவாமியை வணங்கி விட்டுச் சுவர் ஓரத்தில் வரிசையாக இருந்தனர். அவர்களும் சிவபுராண பாராயணத்தில் ஈடுபட்டனர். 'பல்லோரும் ஏத்தப் பணிந்து' என்று முடிவு செய்தேன். உடனே சுவாமிகள் ''என்ன களைத்துப் போனீரோ காணும். சிவபுராணந்தான் காணும் எல்லா நோய்க்கும் மருந்து. படியுங்காணும்'' என்றார். ஆறு ஏழு முறை திருப்பித் திருப்பிச் சிவபுராண பாராயணம் நடந்தது. வந்தவர்கள் வணங்கிவிட்டு வந்த வழியே திரும்பி விட்டனர்.

அடியேன் 'பல்லோரும் ஏத்தப் பணிந்து' என்று முடிவு செய்தேன். ''தொடங்கினால் முடிக்க மாட்டீர் போலும். ஓடுங்காணும் பிட்டு அவித்து வைத்திருக்கிறார்கள். போய்ச் சாப்பிடுங்காணும். இங்கே சாத்திரங் கேட்க வருகினம் காணும்'' என்றார். சுவாமியிடம் சிலர் ஏதோ சாத்திரம் சொல்லும் சாமியார் என்று நினைத்து வருகிறது உண்டு. ஒவ்வொருவரும் என்ன நோக்கத்தில் வருகிறார்கள் என்பதைச் சுவாமி நன்கு அறிவார். சிலரைப் பச்சைப் படியே ஏசி அனுப்பிவிடுவார்.

அடியேன் வெளியே வந்தேன். ஒரே இருட்டு. அந்த றோட்டில் வசுவண்டி ஓடாத காலம். மின்சார வெளிச்சம் இல்லாத காலம். உடனே திரும்பிச் சென்றாற் சிலவேளை

ஏசுவார். என்னகாணும் பயந்து வந்து விட்டியோ என்றும் ஏசுவார். அவர் படுத்த பின் நான் போய் ஒரு பக்கத்தில் படுக்கலாம் என்ற எண்ணத்தில் நின்றேன். ஒரு மோட்டார் வந்து அடியேனுக்குப் பக்கத்தில் நின்றது. என்ன மாஸ்டர் இப்படி நிற்கிறீர்கள் என்றொரு குரல் காரினுள் இருந்து ஒலித்தது. அடியேன் வீடு செல்ல இருப்பதைக் கூறினேன். ஏறுங்கள் வண்டியில் என்று கதவைத் திறந்தார். ஏறி அமர்ந்து கொண்டேன். அவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். ''எங்களுடைய வீட்டிற்கு முதலில் வாருங்கள். பின்னர் உங்களை உங்கள் வீட்டிற் கொண்டு செல்கிறேன் '' என்றார்.

மோட்டார் அவருடைய வீட்டு வாசலில் நின்றது. மனைவியார் ஓடிவந்து பார்த்தார். மாஸ்டர் முதன்முதல் எங்கள் இல்லத்திற்கு வந்திருக்கிறார். அவரைச் சாப்பிடச் செய்து அனுப்புவோம் என்றும் மனைவியாரிடம் கூறினார். அம்மையாரும் முகமலர்ச்சியுடன் உள்ளே சென்றார். ஐந்து நிமிடங்களில் திரும்பிவந்து ஆயத்தம் சாப்பிடலாம் என்று தண்ணீர்ச் செம்பைத் தந்தார். இருவரும் மேசையில் உட்கார்ந்தோம். பிட்டுத்தான் பரிமாறினார்கள்.

சுவாமிக்கு விருப்பமான கத்தரிக்காய்க் குழம்பு, மரவள்ளிக் கிழங்கு மசியல், பாகற்காய்ப் பொரியல் இவற்றுடன் உணவு பரிமாறப்பட்டது. அடியேன் சாப்பிடும் போது இது ''யோகர் சுவாமி தந்த பிட்டுப் போல இருக்கிறதம்மா'' என்றேன். அம்மா இதைக்கேட்டதும் கண்ணீர் மல்க ''யோகர் சுவாமி இரவு கனவில் வந்து தனக்குப் பிட்டுத்தின்ன ஆசையாய் இருக்கிறது என்று கேட்டார். நான் பிட்டு அவித்து வைத்துக் கொண்டு காவல் இருக்கிறேன். இவர் காலையில் புறப்பட்டவர் இப்போதான் வீடு வந்து சேர்ந்தார்'' என்றார். ''அம்மா கவலைப்படாதீர்கள் எனக்காகத்தான் பிட்டு அவிக்கச் சொன்னார். அவர்தான் நீங்கள் பிட்டு அவித்து வைத்திருப்பீர்கள் போய்ச் சாப்பிடு என்று என்னை அனுப்பி வைத்தார்'' என்று கூறி நடந்த சரித்திரம் முழுவதையும் கூறினேன். அம்மையாரும் ஆறுதல் பெற்றார்.


# சிவானந்த தரிசனம்

சுவாமி சிவானந்தர் பக்தமடை என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருச்சியில் வைத்தியக் கல்வி கற்று அதில் பட்டம் பெற்று டாக்டர் குப்புசாமி என்ற பெயரோடு மலேசியாவில் வைத்திய அதிகாரியாகக் கடமை ஆற்றியவர்.

அவருடைய உபதேசங்களுள் சேவைக்கே முதலிடம் கொடுக்கிறார். சேவையைச் செயலிற் காட்டினார். டாக்டராக இருக்கும் போது தபால் பட்டுவாடாச் செய்யும் ஒருவர் அறிமுகம் ஆனார். இருவரும் ஒரு இல்லத்திலேயே வசித்தனர். சுவாமி உத்தியோகத்தில் இருக்கும்போது தபாற்காரர் வீட்டு வேலைகள் எல்லாம் செய்து முடித்து விட்டுச் சாப்பிடுவதற்குச் சுவாமியின் வருகையை எதிர் பார்த்திருப்பார்.

தபாற்காரர் காடுமலையெல்லாம் திரிந்து தபால் கொடுத்துக் களைத்துப் போய்வரும் நேரங்களில், அவருக்குத் தேநீர் குடிக்கக் கொடுத்து, உபசரித்துக் காலுக்கு எண்ணெய் போட்டு உருவிவிடுவார். குப்புசாமியுடன் சேவை உடன் பிறந்தது என்றே கூறலாம். சேவைக்காகத்தான் டாக்டர் படிப்புப் படித்தாரே தவிர பணம் சம்பாதிக்க அல்ல என்பதை அவரது வாழ்க்கை எடுத்துக் காட்டியது.

மலேசியாவை விட்டுக் குப்புசாமி இந்தியா வந்தார். சென்னையில் ஒரு நண்பர் வீட்டில் தனது பெட்டி படுக்கைகளை வைத்தார். நண்பர் அப்பொழுது அங்கில்லை. மனைவியார் அவரை நின்று தேநீர் அருந்திச் செல்லுமாறு எவ்வளவோ பணிவுடன் கேட்டார். குப்புசாமி



சுவாமி சிவானந்தர்

மறுத்து விட்டார். மிகமிக அவசியமான கருமம் அம்மா என்று சொல்லி அன்று மாலையே புகையிரதம் ஏறி இமாசலம் சென்று விட்டார்.

சரஸ்வதி என்ற பெயருடைய குரு ஒருவரிடம் உபதேசம் பெற்றுச் சாதனைகள் செய்யத் தொடங்கினார். குரு உபதேசம் பெற்ற பின் குப்புசாமி சிவானந்தர் ஆனார். ரிஷிகேஷம் சென்று கடும் தவம் செய்தார். ரிஷிகேசத்தில் சுவர்க்காச்சிரமம் என்ற இடத்தில் தவக் குடில் ஒன்றமைத்து கடுந்தவம் ஆற்றினார். தவத்தோடு சேவையும் செய்தார். யாத்திரிகர்களுக்குச் சேவை செய்தார். கேதார் பத்திரி செல்லும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய சேவை செய்து வந்தார். இரவு முழுவதும் தியானம் செய்வார். பகல் முழுவதும் சேவை செய்வார்.

தனது சேவையை உலகம் முழுவதற்கும் பொதுமையாக்கி நிரந்தர சேவையில் ஈடுபட வேண்டும் என்று கருதி ரிஷிகேசத்தில் ஆனந்தக் குடீரம் என்று ஒரு ஆச்சிரமம் அமைத்துப் பணியைத் தொடங்கினார். பல சீடர்கள் அவரை நாடி வந்தனர். எல்லாரையும் பணிசெய்ய உலகம் முழுவதும் அனுப்பினார்.

திவ்ய ஜீவன சங்கம் என்ற பெயருடன் உலகம் முழுவதற்கும் பொதுவான ஒரு அமைப்பு ஏற்படுத்தினார். மிகக் குறைந்த காலத்திலே உலகம் முழுவதிலும் ஐந்நூற்றுக்கும் அதிகமான திவ்ய ஜீவன சங்கக் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன. மணியான சீடர்கள் அப்பணிகளை மேற்கொண்டனர்.

ஆச்சிரமத்தில் இலவச வைத்தியசாலை ஒன்று ஏற்படுத்தி அங்கேயே பல ஆயுர் வேத மருந்துகளை உற்பத்தி செய்தனர். பல நோய்களுக்கும் மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டன. அச்சகம் ஒன்று அங்கேயே ஏற்படுத்தப்பட்டது. சுவாமிகளுடைய முன்னூறுக்கு மேலான நூல்கள் அச்சு வாகனம் ஏறி உலகம் முழுவதும் பரவின. சுவாமியினுடைய உபதேசங்களில் ஒன்று ''கொடு, கொடு கொடுத்துக் கொண்டே இரு'' என்பதாகும். சுவாமி உபதேசத்துடன் நின்று விடவில்லை. ஆச்சிரமத்திற்கு வருவோர்க்

கெல்லாம் அவர்கள் தூக்கக் கூடிய அளவுக்கு அவரது நூல்களை இனாமாகக் கொடுப்பார்.

இத்தகைய சுவாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்ற அவா உள்ளத்தே எழுந்தது. அதற்கேற்றாற்போல் சிவானந்தமண்டலி என்ற பெயருடன் ஒரு யாத்திரைக் கோஷ்டி சென்னையிலிருந்து புறப்பட்டது. அதில் நாங் கள் மூவர் ஈழத்திலிருந்து சேர்ந்து கொண்டோம். மொத்த மாக ஒரு புகையிரதப் பெட்டியில் 108பேர் பிரயாணம் செய்தோம். சுவாமி பரமானந்தர் எங்களுடன் எங்களுக்கு வழிகாட்டியாக வந்தார். ஆனந்தமான யாத்திரை. வழிநெடுகிலும் பஜனை. அந்த பஜனையை வாழ்நாள் முழுவதும் கேட்டுக் கொண்டு இருக்கலாம் போல் தோன் றியது. தங்கும் இடமெல்லாம் தெய்வீக வரவேற்பு. பல தலங்களையும் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ரிஷி கேசம் புகையிரத ஸ்தானத்திலிருந்து வசுவண்டிகளில் சென்றோம். எங்கள் யாத்திரைக் கோஷ்டி சென்றபோது சுவாமி சிவானந்தர் மலைபோல் நின்று வரவேற்றார். அவரைக் கண்டதும் பின்வரும் பாடல் நினைவுக்கு வந்தது:

கங்கையைப் போல தெளிந்த நல் உள்ளம்
கருணைமா முகிலெனத் தோற்றம்
திங்களைப் போல நிலவிடும் சாந்தம்
தினகரன்போல் ஒளிர் ஞானம்
தங்கமே அனைய சாதுக்களுடனே
சதா ஆனந்தக் குடிலில் வேதாந்தச்
சிங்கமே போன்று பிரணவ கர்ஜனை செய்
சிவானந்த ஜோதியைப் பணிவாம்.

அவர்தாள் பணிந்தோம். பரவசம் ஆனோம். கண்டறி யாதன கண்டோம். எங்களுக்கென்று வகுத்த குடீரங்களுக் குச் சென்றோம். இலங்கையில் இருந்து சென்ற மூவருக் கும் ஒரு குடீரம். ஒருவர் சிவதொண்டன் செல்லத்துரை சுவாமிகள். அடுத்தவர் இலங்கை வங்கி மனேஜராய் இருந்த சிவஞான ஜோதி அவர்கள். நாங்கள் மூவரும் மிக மகிழ்வுடன் அக்குடீரத்தில் தங்கினோம். எங்களுக்குத் தொண்டு செய்வதற்கு முழங்காலுக்கு மேல் ஒரு துண்டுக்

காவிகட்டிய ஒருவர் வந்து எல்லாப் பணிகளும் செய்தார். உடை கழுவுவதற்கு இருக்கா என்று கேட்டார். நல்ல காலம் நாங்கள் இல்லை என்றோம். ஏன் நல்ல காலம் என்பதைப் பின்னால் அறிவீர்கள்.

அங்கு விசுநாதர் ஆலயம் ஒன்று இருக்கிறது. அங்கு இரவு பகலாக அகண்ட நாம பஜனை நடந்து கொண்டிருக்கிறது. கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஹரே ராம ஹரே ராம ராமராம ஹரே ஹரே

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

இந்த மகா மந்திரம் இன்றும் இரவு பகலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் 108 பேரும் அதில் கலந்து கொண்டோம். அந்தப் பஜனை மண்டபத்துள் புகும் போதே அந்த மகாமந்திர அலைகளுக்குள் நாம் இருப்பதை உணரமுடிந்தது.

இருபத்து நான்கு சீடர்கள் மாறி மாறிப் பங்கு பற்றுகிறார்கள். ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் இருவர் இருவராகப் பங்கு பெறுகிறார்கள். ஒருவர் சொல்லிக் கொடுக்க மற்றவர் திருப்பிச் சொல்வார். கலந்து கொள்பவர்கள் எல்லோரும் அவர்களையே பின்பற்றுவார்கள். அந்த மந்திர அலையிலே வைக்கப்படும் விபூதிப் பிரசாதத்தை மாதம் தோறும் உலகெங்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

'கிச்சடி' என்ற சொல்லும் அதற்குரிய பொருளும் ஆச்சிரமத்தில் தான் அறிய முடிந்தது. மத்தியானம் மீதிப்படும் சோறுகறி எல்லாவற்றையும் ஒரு கிடாரத்தில் போட்டு அவிய விடுவார்கள். அது கஞ்சி போன்று காணப்படும். அதனை இரவுக்குப் பயன்படுத்துவார்கள். அதனைத்தான் கிச்சடி என்று கூறுவதுண்டு.

இரவு ஏழேகால் மணிக்கு எல்லாருக்கும் இரவுணவு கிடைத்தது. அது சாப்பிட்டுச் சிறிது ஆறுதல் எடுத்ததும் இரவு எட்டு மணிக்கு சத்சங்கம் நடைபெறும். சுவாமி

கள்தான் தலைமை தாங்குவார்கள். சீடர்களும் பேசுவார்கள். அங்கு வருபவர்களும் பேசுவார்கள். கடைசியாகச் சிதானந்தஜீ பேசுவார் என்று சுவாமிகள் கூறினார்கள். யார் என்று பார்த்தோம். எங்கள் குடீரத்தைத் துப்புரவு செய்து நேரத்திற்கு நேரம் தண்ணீர் எடுத்து வைத்தாரே, அவர்தான் எழுந்து வந்தார்.

அவர்தான் சுவாமி சிவானந்தரின் முதலாவது சீடர். அவர்தான் அப்பொழுது ஆச்சிரமத்தை நிர்வகிக்கும் காரியதரிசியாக இருந்தவர். சுவாமியின் மறைவின்பின் சுவாமி சிதானந்தஜீ தான் ஆச்சிரமத் தலைவர் ஆகி உலகம் எல்லாம் சென்று தொண்டு புரிகின்றார்.

அவர் வாயைத் திறந்ததும் முத்துமுத்தாக வார்த்தைகள் வந்து சொரிந்தன. சுவாமிகள் வார்த்தைகளைத் தேடிச் செல்லவில்லை. சொற்கள்தான் சுவாமியைத் தேடிச் சென்றன. இத்தகைய ஒருவர் எங்கள் குடீரத்தில் எமக்குத் தொண்டு செய்ய வந்தாரென்றால் அவரது பணிவையும் சேவை மனப்பான்மையையும் எம்மால் அளவிட்டு உரைக்க முடியுமா?

சுவாமி சிவானந்தர் சிதானந்தஜீயைப் பற்றி ஒரு இடத்தில் எழுதும்போது நாம் எல்லாம் பிறந்து சந்நியாசி ஆனோம். ஆனால் சிதானந்தஜீயோ சந்நியாசியாகவே பிறந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

சுவாமி சிதானந்தர் ஒரு தாசில்தார் குடும்பத்தில் பிறந்தவர். பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். வீட்டில் வேலை ஆட்களுக்கோ குறைவில்லை. இவரது மனம் துறவை நாடியது. இவரது மனோநிலையை யாரும் உணர்ந்தாரில்லை. இவரது தாயாருக்கு ஒரே ஒரு ஆசை. மகன் ஒரு பட்டதாரியாக வர வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. தாயார் தனது ஆசையை மகனிடம் தெரிவித்தார். தாயாருடைய ஆசையைத் திருப்தி செய்வதற்காக B. A. பரீட்சைக்குப் படித்தார். அந்த மாகாணத்திலேயே முதலாவதாகத் தேறினார். B. A. சித்தி அடைந்த தராதரப் பத்திரத்தைத் தாயாரிடம் கொண்டு சென்று கொடுத்தார். தாயார் மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

இவர் அடுத்தநாளே யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ரிஷிகேசம் போய்ச் சேர்ந்தார். சுவாமி சிவானந்தருடைய அரவணைப்பில் வாழ்ந்தார். சிதானந்தஜீ தமக்குச் சிஷ்யனாகக் கிடைத்தது தான் செய்த தவம் என்று சிவானந்தர் பகிரங்கமாகக் கூறினார். சிவானந்தர் உலகச் சுற்றுப்பயணம் செய்தவர் என்றாலும், சிவானந்தர் மூலமூர்த்தியாகவே இருக்கச் சிதானந்தஜீ உற்சவ மூர்த்தியாகி உலகமெல்லாம் வலம் வந்து கொண்டிருக்கிறார். சிதானந்தஜீ ஆச்சிரமத்தில் இருக்கும் நாட்கள் மிகக் குறைவு. வெளியே போகும் நாட்கள்தான் மிக அதிகம்.

சுவாமி சிவானந்தர் அடியேனை முத்தையாஜீ என்றே அழைப்பார். இருமுறை ஆச்சிரமத்தில் சென்று தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. ஒருமுறை இலங்கையில் சுவாமிகளின் திக்விஜயத்தின்போது தரிசிக்கும் பாக்கியமும் பெற்றேன்.

ஒருமுறை சுவாமி அடியேனைப் பார்த்து எத்தனை ஆத்மஜோதி வெளியிடுகிறீர்கள் என்று கேட்டார். அடியேன் இரண்டாயிரம் பத்திரிகைகள் என்றேன். 'மாவலஸ்' என்று முதுகில் தட்டினார். ஏன் சுவாமி என்றேன். 2000 பத்திரிகை வெளியானால் 20,000 பேர் ஆத்மஜோதி வாசிக்கிறார்கள் என்று கூறினார்.

சுவாமிகளின் இமயமலை போன்ற தோற்றத்தையும் அவரது இனிய வார்த்தைகளையும் இப்போது நினைத்தாலும் உடம்பு புல்லரிக்கிறது.

## சித்தானைக்குட்டி தரிசனம்

பெருநாளி என்பது இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஓர் ஊராகும். இது ஒரு சிறு இராச்சியமாக இருந்தது. இந்த இராச்சியத்தில் ஒருமுறை கொள்ளை நோய் ஒன்று பரவியது. பலர் இந்த நோய்க்குப் பலியானார்கள். சில குடும்பங்களில் எவருமே மிஞ்சவில்லை. ஒருநாள் இரண்டு சாதுக்கள் தோன்றினார்கள். வீடு வீடாகச் சென்று பிச்சை ஏற்றார்கள். சிலர் பிச்சை இட மறுத்தார்கள். பிச்சையிட மறுத்தவர்களிடம் வற்புறுத்தி வாங்கினார்கள். அவர்கள் பிச்சை பெற்ற வீடுகளில் திரும்ப அந்த நோய் காணப் படவே இல்லை. அவர்களிடமிருந்த நோய்களையே மறை முகமாகப் பிச்சையாக ஏற்றார்கள்.

இந்த இரண்டு சாதுக்களின் சேவையைப் பெருநாளி அரசர் கேள்விப்பட்டார். இந்தச் சாதுக்களைக் கௌரவிக்க வேண்டும் என்று அரசர் நினைத்தார். தனது மகன் கோவிந்தசாமியை அந்த இரு சாதுக்களையும் தேடி அழைத்து வருமாறு அரசர் அனுப்பினார். கோவிந்தசாமி பல இடங்களிலும் அலைந்து திரிந்து கடைசியில் ஒரு இல்லத்தில் இரு சாதுக்களையும் சந்தித்தார். கோவிந்த சாமி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபின் தன் தந்தை அவர்களை அழைத்ததாகக் கூறினார். சாதுக்கள் இருவரும் பலமாகச் சிரித்து உங்கள் அப்பாவின் பாராட்டுதலுக்காக நாம் ஏதும் செய்யவில்லை. நீயும் உன் வழியே செல். நாங்களும் எங்கள் வழியே செல்கின்றோம் என்றார்கள். ஆனால் கோவிந்தசாமி திரும்பி வீட்டிற்குச் செல்லவே இல்லை. சாதுக்கள் இருவருடனும் பெருநாளி இராச்சியத்தை விட்டு வெளியேறினார். சாதுக்களும்

கோவிந்தசாமி தம்முடன் வருவது பற்றி ஆட்சேபம் எதுவுமே தெரிவிக்கவில்லை. இருவர் இப்போது மூவரா னார்கள். மூவரும் வடநாடு சென்றார்கள். தீர்த்தயாத் திரை முடித்துக் கொண்டு மூவரும் தூத்துக்குடி சென்றார் கள். அங்குள்ள செட்டியார் கணக்கப்பிள்ளை ஒருவரிடம் கொழும்பு செல்வதற்குக் கப்பல் ரிக்கெற் வாங்கிவருமாறு பணித்தார். கணக்கப்பிள்ளை இரண்டு ரிக்கெற்றுடன் தான் வந்தார். மூன்றாவது ரிக்கெற் இல்லை என்று கணக் கப்பிள்ளை கூறினார். பெரியவர்கள் இருவரும் இரு ரிக் கெற்றுகளையும் பெற்றுக் கொண்டார்கள். கோவிந்தசாமி அதைப்பற்றி எவ்வித கவலையும் கொள்ளவில்லை.

அவ்விருவருந்தாம் பெரியானைக் குட்டியும் நவநாத சித்தரும். பெரியானைக்குட்டியின் சமாதி கொழும்பு முகத்துவாரத்திலும் நவநாத சித்தரின் சமாதி மலையகத்தில் குயீன்ஸ்பரி என்ற தோட்டத்திலும் இருக்கிறது.

கோவிந்தசாமி மற்றைய இருவரையும் கப்பலேற்றியபின் அங்கேயே நின்றுவிட்டார். கப்பல் கொழும்புத் துறை முகத்தை அடைந்தது. அக்கப்பலில் வந்தவர்களை வரவேற்கப் பலர் வந்திருந்தார்கள். அவர்களுக்குள்ளே கோவிந்தசாமியும் காணப்பட்டார். கோவிந்தசாமியைக் கண்ணுற்ற சாதுக்கள் இருவரும் எவ்வித ஆச்சரியத்தை யும் காட்டிக் கொள்ளவில்லை.

நவநாத சித்தர் மலைநாடு சென்றுவிட்டார். பெரி யானைக்குட்டி கொழும்பில் தங்கினார். கோவிந்தசாமி பெரியானைக்குட்டியையே குருவாகக் கொண்டு சித் தானைக்குட்டி ஆனார். பெரியானைக்குட்டியின் சமாதி யின்பின் சித்தானைக் குட்டி தனித்தவரானார்.

சித்தானைக்குட்டி கதிர்காம யாத்திரையை மேற் கொண்டார். திசைமகறாகாமாவில் ஒரு ஓவசியர் வீடு. அங்கு கணவன் மனைவி இருவருமே தாம். ஓவசியர் ஒரு குடிகாரன். குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்ட அந்த அம்மையார் ஒரு சுகத்தையும் அனுபவித்தாருமில்லை.

சித்தானைக்குட்டி சுவாமி ஓவசியர் இல்லாத நேரத்தில் ஓவசியர் வீட்டுக்குச் செல்வார். அம்மையார்

கொடுப்பதை முற்றத்தில் நின்றபடியே வாங்கி அருந்தி விட்டு நின்ற நிலையிலேயே தண்ணீரும் வாங்கிக் குடித்து விட்டுத் தன்வழியே சென்று விடுவார். ஔவசியருக்கு சாதுக் களைக் கண்டால் பிடிக்காது. அம்மையாரோ சாதுக்களைக் கடவுளாகக் கருதியே அவர்களுக்குச் சேவை செய்வார். சாதுக்களின் சேவையினால் அந்த அம்மை யார் அமைதியும் சாந்தமும் பெற்றார்.

குடியினால் ஔவசியருக்கு வேலை போயிற்று. ஆனால் அவர் குடியை விடவில்லை. உழைப்பில்லாமல் எத்தனை நாளுக்குத்தான் குடிக்க முடியும்? ஔவசியரின் பொருளாதாரம் வீழ்ந்தது. எல்லாப் பொருட்களும் விலைப்பட்டுவிட்டன. ஔவசியருடைய மனைவி தனது சீதனக் காணியைச் சுவாமி பேரிலேயே எழுதிவைத்து விட்டார். இதனை ஔவசியர் அறியார். சுவாமிகள் முன் கூட்டியே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவு சென் றடைந்து விட்டார். அங்கேதான் ஔவசியர் மனைவியின் காணியும் இருந்தது. அக்காணிக்குள் ஒரு சிறுவீடு அமைத்து ஔவசியர் அம்மா இருந்தார்.

ஔவசியர் அம்மா சித்தானைக் குட்டியின் பிரதம சிஷ்யை ஆகிவிட்டார். சுவாமியும் சிஷ்யையும் ஒருவீட்டில் வாழ்ந்த படியினால் உலகத்தவர் கண்ணுக்கு கணவனும் மனைவியுமாகவே பட்டனர். இதுதான் உலகம். இந்த நிலையில் சுவாமி வாழ்ந்து கொண்டிருக்கும்போதுதான் அடியேன் ஒருநாள் காரைதீவு சென்று சுவாமிகளுடைய ஆச்சிரமத்தை அடைந்தேன். சுவாமிகளுடன் ஏழெட்டுப் பேர் ஏதோ சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அடியேன் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றேன். சுவாமிகள் கை யினால் அமரச் சொன்னதும் அமர்ந்தேன்.

அவரது முதல் தரிசனத்திலேயே அவர் ஒரு பெரிய மகான் என்பதை அடியேனால் உணர முடிந்தது. அவர் முன்னிலையில் இருந்து சுவாமிகளையே தியானித்தேன். உள்ளத்தில் ஒரு அமைதி பிறந்தது. அந்த அமைதியிற் கண் களைத் திறந்தேன். சுவாமிகளின் திரு உருவம் பேரொளிப் பிழம்பாகத் தோன்றியது. அயலில் இருந்தவர் கள் எல்லோருமே தியான நிலையில் காணப்பட்டனர்.

சுவாமிகளின் முன்னிலையில் ஒரு சாராயப் போத்தல் உடைக்காமல் முழுதாகவே இருந்தது. கொழும்பில் இருந்து 3,4 பேர் சுவாமிகளைத் தரிசிக்க மோட்டாரில் வந்திருந்தனர். சுவாமிகளின் சீடர் ஒருவர் கொழும்பில் இருந்து வந்தவர்களுக்குச் சாராயப் போத்தலை உடைத்து சிரட்டைகளில் ஊற்றிக் கொடுத்தார். ஒருவர் மறுத்தார். வேண்டாம் என்றார். சுவாமி வற்புறுத்தினார். தான் சைவம் என்றார். நாங்களும் சைவந்தானே என்றார் சுவாமி.

கொழும்பில் இருந்து வந்த மற்றொருவர் மறுத்த நண்பரிடம் இது சாராயம் அல்ல உனது நோய்க்கு மருந்து என்றார். வாங்கிக் குடித்தார். மாறாமல் இருந்த வயிற்று வலி உடனே மறைந்து விட்டது. அவருடைய வாய்க்கு இனிமையான நன்னாரி சர்பத் போல இருந்தது. ''சுவாமி மன்னிக்க வேண்டும். சுவாமியின் பெருமை தெரியாமல் மறுத்துவிட்டேன். அடியேனை மன்னித்துக் கருணை காட்டுங்கள்'' என்றார். பல்லாண்டுகளாக மாறாமலிருந்த வயிற்று வலி எங்கோ மறைந்துவிட்டது.

சுவாமி இன்னுங் கொஞ்சந் தாருங்கள் என்றார். சுவாமி தன் கைப்படச்சிறிது ஊற்றிக் கொடுத்தார். அன்பர் அருந்தினார். முகத்தைச் சுழித்தார். அது மருந்து; இது சாராயம் என்றார் சுவாமிகள்.

கண்ணனும் அர்ச்சுனனும் ஒருநாள் மாலை வயல் வெளிப் பக்கமாகச் சென்றார்கள். ஊர்க்குருவி பறந்தது. அதனைக் கண்ணன் காகம் என்றான். அர்ச்சுனன் ஆம் என்றான். முட்டாள் அது பருந்து அல்லவா என்றான் கண்ணன். அர்ச்சுனன் சரிதான் என்றான். ''அர்ச்சுனா நன்கு கவனி, அது கழுகு'' என்றான் கண்ணன். அர்ச்சுனன் அதற்கும் சரிதான் என்றான். கண்ணன் அர்ச்சுனனைத் தட்டிக் கொடுத்தான்.

''கண்ணா உன்னால் ஊர்க்குருவியை காகமாக்க முடியும்; காகத்தைப் பருந்தாக்க முடியும்; பருந்தைக் கழுகாக்க முடியும். உனது கண்ணுக்கூடாகப் பார்ப்பது தான் எனது வேலை'' என்றான் அர்ச்சுனன். சுவாமிகள்

இதுதான் பூரண சரணாகதி என்று விளக்கம் கொடுத்தார்கள்.

ஒருமுறை கல்முனை நெல்வயல் எல்லாம் மழை இன்மையால் வரண்டு காய்ந்து கிடந்தன. நெல் கதிர்வரும் பருவம். இந்த நேரத்தில் மழை பெய்யாவிட்டால் வேளாண்மையே கிடையாது. கமக்காரர் எல்லாரும் ஒன்று சேர்ந்தார்கள். சுவாமியிடம் சென்று முறையிட்டார்கள்.

''நான் என்ன கடவுளா? கோயிலிற் சென்று கும்பிடுங்கோ'' என்று கூறினார் சுவாமிகள். மக்கள் ஒரே குரலில் ''நீங்கள்தான் எங்களுடைய கடவுள்''என்றார்கள். எழுந்து போக மறுத்தார்கள். சரி, எல்லாரும் சென்று அவரவர் வயலுக்குள் நில்லுங்கள் என்றார் சுவாமிகள். ஒரு சிலர் மற்ற வயலுக்குப் பெய்யும் மழை நமக்கும் பெய்யுந்தானே என்று வீட்டிலேயே இருந்து விட்டார்கள். சுவாமிகள் சென்றார்கள். வரம்பில் கிடந்த மணலில் ஒரு பிடி எடுத்தார்கள். ஆகாயத்தை நோக்கி வீசினார்கள். மழை சோனாவாரியாகப் பெய்தது. ஆட்கள் இல்லாத வயல்களுக்குள் ஒரு துளி மழைதானும் இல்லை. மழை பெய்யாத வயலுக்குரியவர்கள் எல்லாரும் சுவாமியிடம் ஓடினார்கள். சுவாமியின் முன்னே அடித்துப் புரண்டு அழுதார்கள். சுவாமிகள், எனக்கு முன்னே அழுது புரண்டு என்ன பயன்? உங்கள் வயலுக்குள் சென்று அடித்துப் புரண்டு அழுங்கள் என்றார். ஒருவர் மாத்திரம் ஓடி வயலுக்குள் நின்று அழுதார். அவருடைய வயலுக்கு மாத்திரம் மழை பொழிந்தது. மற்றவர்கள் இந்தப் பரீட்சையிலும் தவறி விட்டார்கள்.

ஒருநாள் சுவாமிகள் கல்முனைச் சந்தியில் நின்று கொண்டிருந்தார். ஒரு பக்தர் கதிர்காமம் பேசய்க் கொண்டிருந்தவர் சுவாமியைக் கண்டதும் சுவாமியை நோக்கி வந்து கொண்டிருந்தார். கிட்ட வந்ததும் வணங்கினார். தான் கதிர்காமம் செல்வதாகக் கூறினார். ''நல்லது வா இருவரும் சாப்பிடுவோம்; சாப்பிட்டபின் செல்லலாம்'' என்றார். இருவரும் சாப்பாட்டுக் கடை வைத்திருக்கும் அம்மாவிடம் சென்றனர். அம்மா இருவருக்கும் இலை

போட்டு உணவு பரிமாறினார். கறி மீன் குழம்பு. சுவாமி யின் இலையில் மீன் விழுந்ததும், ''நான் விரதம் சுவாமி கதிர்காமம் முடியும் வரை சாப்பிடுவதில்லை'' என்றார் பக்தர். சுவாமி ''நானும் விரதந்தான். ஒருவருக்குச் சாப் பாடு கொடுத்துச் சாப்பிடுவதுதான் எனது விரதம்'' என் றார். சுவாமியின் வற்புறுத்தலால் சாப்பிடத் தொடங்கி னார். அது மீன் குழம்பு அல்ல. அது வாழைக்காய்க் குழம்பு.

மகான்கள் வாழைக்காயை மீனாக்குவார்கள். மீனை வாழைக்காய் ஆக்குவார்கள். அது அவர்களுடைய இயல்பு.

கதிர்காமம் செல்ல இருந்தவர் சுவாமியை விழுந்து வணங்கிச் சுவாமியினுடைய ஆசியைப் பெற்று கதிர்காமம் சென்றார். அன்பர் கோயிலில் வணங்கிக் கொண்டு நின்ற போது கதிர்காமம் திரை எரியக் கண்டார். சித்தானைக் குட்டி சுவாமிகள் அத்திரை எரியாமல் கசக்கி அணைத்ததையும் கண்டார். சுவாமி எப்படி அந்த நேரம் வந்திருக்க முடியும் எனச் சிந்தித்தார். தனது வழிபாடுகள் எல்லாம் முடிந்து ஊருக்குத் திரும்பினார். திரும்பும்போது அதே கல்முனைச்சந்தியில் ஒரு மதகின் மேல் சுவாமி இருக்கக் கண்டார். ஓடோடியும் வணங்கினார். நீங்கள் எப்போ வந்தீர்கள் என்று அன்பர் கேட்டார். சுவாமிகள் நான் எங்கும் சென்றதில்லை. இங்குதான் இருக்கிறேன் என்றார். அன்பரால் அதனை நம்பவே முடியவில்லை. ''என்னைப்போல இந்த உலகத்தில் எத்தனைபேர் இருக் கிறார்கள். நீர் பார்த்தவர் ஏன் அவர்களில் ஒருவராக இருக்க முடியாது?'' என்றார்.

காரைதீவு வாசிகளுக்குச் சுவாமிகளைக் கண்ணில் காட்ட ஏலாது. அவர் ஒரு பெண்பிடி சாமி என்று கூறி அவரை யாரும் அணுகுவதில்லை. அதனால் ஏற்பட்ட நஷ்டம் அவர்களுக்கே அன்றிச் சுவாமிகளுக்கு ஒரு இழப் பும் இல்லை. சுவாமி தன்னை ஒரு பைத்தியகாரன் போலத்தான் காட்டிக் கொண்டார். இந்த இயல்பு பல மகான்களிடம் காணப்படுகின்றது.

அடியேன் சிலநாட்கள் காரைதீவில் தங்கி முப் பெருஞ் சித்தர் என்ற நூலை எழுதினேன். நவநாத சித்தர், பெரியானைக்குட்டி, சித்தானைக்குட்டி ஆகிய மூவருந் தான் அந்த முப்பெருஞ் சித்தர்கள் ஆவார்கள். அந்த நூல் காரைதீவிலேயே அரங்கேற்றம் பெற்றது. அந்த நூலை வாசித்த பின்தான் சுவாமிகளின் மகிமையைக் காரைதீவு வாசிகள் அறிந்து கொண்டார்கள். அதன் பின்பு சுவாமி களுடைய சமாதியில் ஆடிச் சுவாதியில் குருபூஜை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. காரைதீவு மக்கள் எல்லோ ருமே அதில் பங்கு கொள்ளுகிறார்கள். அயலூர்களில் இருந்தெல்லாம் மக்கள் ஆயிரக் கணக்கில் வந்து பங்கு பெறுகின்றார்கள்.

அடியேனும் பல குரு பூஜைகளில் பங்கு பெறும் வாய்ப்பைச் சித்தானைக்குட்டி சுவாமிகள் அருளினார் கள்.

# ஞானானந்த தரிசனம்

ஹரிதாஸ் சுவாமிகள் என்றொருவரை நீங்கள் எல்லீரும் நன்கு அறிவீர்கள். இவரை இவரது பக்தர்கள் 'குருஜீ' என்றே அழைப்பார்கள். இவரது பக்தர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது சுட்டுவிரலையும் நடுவிரலையும் விரித்து உயர்த்திக் காண்பித்து ராதே கிருஷ்ணா என்று சொல்வார்கள்.

இவருடைய குருநாதர்தான் திருக்கோவலூர் ஞானானந்த சுவாமிகள். இவர் ஒரு ஞானப்பழம். நன்கு பழுத்த ஞானப்பழம். இவருக்கு நிகர் இவரேதான். இவர் 160 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தார் என்று இவருடைய பக்தர்கள் கூறுவார்கள்.

நாங்கள் ஆறுபேர் ஒரு மோட்டாரில் சென்று கொண்டிருந்தோம். வளையாம்பட்டி என்ற கிராமத்தில் பாலயோகி ராமதாசர் என்ற மகான் ஒருவரைத் தரிசித்துச் செல்வதில் சிறிது காலதாமதமாகி விட்டது. ஞானானந்தருடைய ஆச்சிரமத்திற்கு எவ்வித அறிவித்தலுமின்றி அங்குதங்கலாமென்று சென்றோம். வழக்கமாக ஆச்சிரமம் இரவு எட்டு மணிக்கு முன்பே கதவடைத்து விடுவார்கள்.

நாங்களோ வளையாம்பட்டியை விட்டுப்புறப்படும் போதே இரவு எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. அங்கிருந்து ஆச்சிரமம் 20 மைலுக்கு மேலாகும். எங்களுக்கோ ஆச்சிரமச் சட்ட திட்டங்கள் ஒன்றுந் தெரியாது.

ஆச்சிரமத்தில் ஏழு மணி தொடக்கம் சத்சங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வழக்கம்போல் எட்டு



ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள்

மணிக்குப் படுக்கைக்கு எழுந்தார்கள். அப்போ சுவாமி, அவர்கள் வந்து விடுவார்கள் கொஞ்சம் பொறுங்கள் என்று கூறினார். நாங்கள் சரியாக ஒன்பது மணிக்குத் தான் சென்று சேர்ந்தோம். நாங்கள் மோட்டாரைவிட்டு இறங்கிச் செல்வதற்குள் சுவாமி அவர்கள் வந்து விட்டார் கள். நீங்கள் படுக்கைக்குச் செல்லலாம் என்றார்கள். காரியஸ்தர் ஓடிவந்து உங்கள் ஆறுபேருக்குச் சுவாமியின் கட்டளைப்படி படுக்கை ஒழுங்கு செய்துள்ளோம் என் றார். முன்னால் உள்ள கடைக்காரர் ஓடிவந்து யாரோ ஒருவர் வந்து இரவுக்கு ஏழு பேருக்குச் சாப்பாட்டிற்குச் சொல்லிச் சென்றார்.அவர்கள் வந்து விட்டார்களா என்று கேட்டார். யார் சாப்பாட்டுக்குச் சொன்னார் என்று யாருக்குமே தெரியாது. கடைக்காரருக்கும் ஆளைத் தெரி யாது. ஆச்சிரம வாசிகளையென்றால் கடைக்காரருக்கு நன்கு தெரியும்.

எல்லாம் அற்புத மயமாகவே இருந்தது. படுக்கை ஆறு. சாரதி காரிலேதான் படுப்பார். அவரோடு சேர்த்துச் சாப்பாடு மாத்திரம் ஏழு பேருக்கு. இந்த அற்புதத்தை இன்றும் நினைந்து நினைந்து ஆனந்தப் படுகிறோம்.

சாப்பிட்டு விட்டுப் படுத்து விட்டோம். நான்கு மணிக்கே எழுந்து காலைக் கடமைகளை முடித்துச் சுவாமி களின் முன்பு அமர்ந்தோம். அன்றலர்ந்த செந்தாமரை போன்ற சுவாமிகளுடைய முகத்தை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுப்புத்தட்டாது. புன்முறு வல் பூத்தவண்ணம் சுவாமிகள் செய்யும் உபதேசம் காதுக் கும் கண்ணுக்கும் இனிமையானவை.

திருக்கோவலூர் பல அற்புதங்களை அடக்கியுள்ளது. தேவாரம் பாடிய மூவரில் இருவர் பிறந்த ஊர். திருக் கோவலூர்க் கண்ணன் கோயில் மிகமிகப் பிரசித்தி பெற் றது. ஆச்சிரமத்திற்குத் தினமும் நூற்றுக்கணக்கான பக்தர் கள் வருவார்கள். அத்தனை பேருக்கும் சுவாமிகள் ஆறுதல் கூறி அனுப்புவார்கள். ஒருமுறை ஆச்சிரமத்தைத் தரிசித்தவர்கள் உள்ளத்தில் சுவாமியின் திரு உருவைச் சுமந்து செல்வார்கள். அவர்கள் உள்ளத்தில் சுமந்து

கொண்டு வந்த சுமைகளையெல்லாம் சுவாமியின் திருவடி களில் இறக்கி வைத்தே செல்வார்கள். சுவாமிகளின் உப தேசம் கற்கண்டோ, தேனோ என்று கூறவொண்ணா வகையில் அற்புதமாக அமைந்திருக்கும். எந்தக் கவலையுடன் வருபவரும் அமைதி பெற்றுச் செல்வது சுவாமியின் சந்நிதப் பெருமையாகும்.

ஹரித்தாஸ் சுவாமிகள் தன்னைப் பற்றிச் சொல்லுகை யில் தான் ஒரு மண்டு என்றும் அறிவற்றவன் என்றும் சங்கீதம் தெரியாதவன் என்றும் எந்தப் பள்ளிக்கூடத்தி லும் அறிவைத் தேடியவன் அல்ல என்றும் இரும்பை பாத ரசம் பொன்னாக்குவதுபோல் சுவாமிகள் தன்னைச் சொக் கத் தங்கமாக்கி உள்ளார் என்றும் கூறுவார்.

குருவிலும் உயர்ந்த தெய்வம் வேறில்லை என்பது அவருடைய நம்பிக்கை. கு என்றால் இருட்டு. ரு என்றால் நீக்குபவர். குரு என்றால் அக இருளை நீக்குபவர் என்பது பொருள். புற இருளைச் சூரியன் சந்திரன் அக்கினி என் பன நீக்கும். அக இருளை குரு ஒருவரால்தான் நீக்க முடியும்.

குரு இல்லாவித்தை மேலுமில்லைக் கீழுமில்லை என் பார்கள். அதாவது குரு இல்லாமல் இதற்கு முன்னும் ஒரு வரும் மேலோங்கியது இல்லை. இனி மேலும் அப்படி நிகழப் போவதுமில்லை என்பது கருத்து. குரு இல்லாமல் முத்தி கிடையாது என்பது பெரியோருடைய கருத்து.

''தியான மூலம் குரோர் மூர்த்தி
பூஜா மூலம் குரோர்ப் பதம்
மந்திர மூலம் குரோர் வாக்கியம்
மோட்சா மூலம் குரோர்க் கிருபா.''

அதாவது தியானத்திற்கு மூலம் குருவினுடைய திருஉருவம். இதனைத் திருமூலர்

''தெளிவு குருவின் திருமேனி காண்டல்''

என்று குறிப்பிடுவார். பூஜைக்கு மூலம் குருவினது திருவடி. இப்பூஜை திருவடிப்பூஜை என்று அழைக்கப் படும். உலகில் உள்ள ஜீவர்கள் எல்லாம் இறைவனது திரு

வடியை நோக்கியே யாத்திரை செய்கின்றன. இதனால் எங்கள் எல்லாரையும் திருவடியாத்திரைக் காரர் என்று அழைப்பர். இதனை உணரும் போது நாங்கள் எல்லோரும் சகோதரர்கள் ஆகிறோம். எல்லோருக்கும் நோக்கம் ஒன்று. எல்லாரும் செல்லும் பாதை ஒன்று. இதை உணர்ந்து விட்டால் உலகில் சண்டை சச்சரவு, வேற்றுமைக்கே இடமில்லை. இதனை உணராமையினால் தான் வேற்றுமை பாராட்டுகிறார்கள்.

மந்திரத்திற்கு மூலம் குருவின் உபதேசம். மந்திரம் என்றால் நினைப்பவரைக் காப்பது என்பது பொருள். குருவின் மூலம் உபதேசமாகப்பெறும் மந்திரமே வலுவுடையது. குரு வேறு இறைவன் வேறு அல்ல. அது போல குரு உபதேசம் வேறு கடவுள் வேறு அல்ல. எல்லாம் ஒன்றே. இறைவன் திருவருளே குருமூர்த்தமாக வருகிறது.

குருவினுடைய கிருபை இல்லாமல் மோட்சம் இல்லை என்பது எப்பவோ முடிந்த முடிவு. முத்தியை இறைவனாலும் கொடுக்க முடியாது. குரு ஒருவரால்தான் கொடுக்க முடியும்.

''தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே''

என்பது திருமூலர் திருவாக்கு.

நாங்கள் முதன்முதல் வித்தையை ஆரம்பிக்கும் போது ''குருப்பிரியா நம'' என்றுதான் ஆரம்பிக்கின்றோம். சமயதீட்சை பெறும் போதும் குருவே முன்னிற்கிறார். பிரம்மச்சரிய ஆச்சிரமம் முற்றி கிருகஸ்தாச்சிரமம் புகும் போதும் குருவே முன்னின்று வழிகாட்டுகின்றார். குருவின் தத்துவத்தை எம்மால் வாய்விட்டுச் சொல்ல முடியாது.

எங்கள் எல்லோருக்கும் ஆதி குருவாக உள்ளவர் தட்சிணாமூர்த்தி ஆவார். அவர் தெற்குப் பார்த்த முகத்தோடு இருந்து நால்வருக்கு உபதேசம் செய்தார்.

நான்கு சீடர்களும் வடக்குப்பார்த்த முகத்தோடிருந்து தட்சிணாமூர்த்தியின் உபதேசத்தைப் பெற்றனர். அதனால்தான் நாம் வடக்குப் பார்த்து கும்பிடுகிறோம்.

சுவாமி ஞானானந்தர் உலகம் முழுவதற்கும் ஞான குருவாக விளங்கினார். பூத உடலைவிட்டு ஆத்மா மறைந்தாலும் ஹரிதாஸ் சுவாமிகளின் நன் முயற்சியால் அவர் கோயிலில் தெய்வமாகி விட்டார். சமாதிகள் வைக்கப்பட்ட கோயில்கள் பிரகாசம் பெற்று விளங்கு வதை இன்றும் காண்கின்றோம். பழநியின் பிரகாசத்திற்கு முக்கிய காரணம் அங்கு போகருடைய சமாதி இருப் பதுதான்.

குரு ஒருவர் பூத உடலை நீத்தாலும் அவர் சூக்கும உடலில் நின்று அருள் புரிந்து கொண்டிருக்கிறார் என் பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் இருக்கின்றன.

அழுந்தொறும் அணைக்கும் அன்னை
அறிவிலாது ஆடி ஓடி
விழுந்தொறும் எடுக்கும் அப்பன்
விளையாடும்போது தோழன்
தொழுந்தொறும் காக்கும் தெய்வம்
சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம்
குழந்தை இப்படி உலாவும்
குருநாதன் வாழி வாழி.

குருநாதன் அன்னையாய் அப்பனாய் தோழனாய் தெய் வமாய் குழந்தையாய் உலாவிடுவான் என்று இப்பாடல் கூறுகின்றது.

குருநாதன் இல்லாவிட்டால் உலகமே இருட்டுக்குள் தான் வாழும். அஞ்ஞான இருளில் இருந்து ஞான ஒளிக்கு வழிகாட்டுவது குருவின் தத்துவமாகும்.

''காயனை அகாயனாக்கி கண்டனை அகண்டனாக்கி
பேயனைப் பிரம்மமாக்கி பிறப்பு இறப்பிலாமையாக்கி
தாயினும் இனியனாகி தகைந்தெனை அணைந்து ஆண்ட
தூயசற் குருவேநின்னைத் தொழுந் தொறும் துலங்குமே.''

# இராமதாச தரிசனம்


இவருடைய தந்தையே இவருக்கும் குருவாக விளங்கினார். தந்தையிடம் உபதேசமாகப் பெற்றுக் கொண்ட மந்திரம்

''ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்''

என்பதாகும். அதன் துணைகொண்டு இந்தியா முழுவதும் சுற்றினார். எல்லாம் ராமனிச்சை என்றே ராமனிடம் தன்னை முற்றாக ஒப்புக் கொடுத்து வாழ்ந்தார்.

ஒருமுறை இவரும் இவரது சீடரும் புகையிரதத்திற் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். ஒரு புகையிரத ஸ்தானத்தில் இரண்டுநகர் காவலர்கள் ஏறினார்கள். தாம் இருப்பதற்கு இடம் இருக்கா என்று பார்த்தனர். இவர்கள் இருவரையும் கண்டனர். ரிக்கெற் என்று கேட்ட னர். இருவரும் எழுந்து நின்றனர். சாதுக்கள் எவரும் இந்தியாவில் புகையிரதத்தில் பிரயாணம் செய்வதற்கு உத்தரவுச் சீட்டுப் பெறும் வழக்கம் இல்லை. அதனால் தான் நகர்காவலர் இருவரும் ரிக்கெற் என்று கேட்டனர். இது எல்லோருக்குமே தெரியும்.

எழுந்து நின்ற இருவரையும் கீழே இருக்கச் செய்த நகர்காவலர் இருவரும் இவர்கள் இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டனர். அமர்ந்ததும் தாங்கள் அணிந் திருந்த தொப்பிகள் இரண்டையும் கழற்றி இவர்களிடம் கொடுத்துப் பத்திரமாக வைத்திருங்கள் என்று கூறி அவர்கள் இருவரும் நன்றாகத் தூங்கி விட்டனர். இராம தாசருடன் கூட வந்தவருக்குப் பெரிய கோபம். இப்படிச் செய்யலாமா என்று பொரிந்து தள்ளினார். இராமதாசர்



சுவாமி இராமதாசர்

கூறினார், ''இராமன் எங்களுக்குச் சுகத்தைத் தந்தார். நாங்கள் அந்தச் சுகத்தில் ராமனை மறந்து விட்டோம். ராம ஜெபம் செய்யுமாறு எங்களுக்கு இத்தண்டனையைக் கொடுத்துள்ளான்'' கோபம் ஆறி இருவருமே ராமநாம ஜெபம் செய்தனர். இவர்களுடைய ஜெபத்தின் வலிமை போலும் நகர்காவலர் இருவரும் எழுந்து இருவரிடமும் மன்னிப்புக்கோரி அந்த இடத்தில் இருக்கச் செய்தனர்.

இவர் இந்தியா முழுவதும் செய்த யாத்திரையை 'அருள்நாடிய யாத்திரை' என்ற பெயரால் ஒரு புத்தகம் எழுதினார். அதை வாசிக்கும் போதே நாமும் அந்தத் தலங்களில் இருப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

யாத்திரை முடிந்ததும் மங்களூரைச் சேர்ந்த கஞ் சன்காடு சென்றார். அங்கே ஆனந்தாச்சிரமம் என்ற பெயரோடு ஒரு ஆச்சிரமம் அமைத்தார். அங்கு அன்னை கிருஷ்ணாபாய் சுவாமிக்குச் சிஷ்யையாக வந்து வாய்த்தார்.

கிருஷ்ணாபாய் இரண்டு குழந்தைகளின் பின் கண வனை இழந்த விதவை. கணவனை இழந்தபின் இல்லறத்தில் இருக்க விரும்பவில்லை. ஆத்ம ஞானத் தைத்தேடி சுவாமிகளை வந்து அடைந்தார். குழந்தைகள் இருவரையும் வளர்க்கும் பொறுப்பை இவருடைய கணவனாரின் தமையனார் ஏற்றுக்கொண்டார். அன்னை கிருஷ்ணாபாய் இருபது வயதிலேயே சுவாமிகளைக் குருவாகக் கொண்டார்.

சிலநாட்கள் பகல் முழுவதும் சுவாமிகளுடன் இருந்து இரவு வீட்டுக்குச் சென்று விடுவார். காலகதியில் தனது குருநாதருக்கு முழுநேரத் தொண்டு செய்ய மனம் கொண் டார். முழுநேரமும் ஆச்சிரமத்திலேயே தங்கிவிட்டார். சுவாமிகளுடைய தவத்திற்கு உறுதுணையாக இருந்து வந் தார். ஓர் இளம் பெண் ஆச்சிரமத்தில் இருப்பது சில தூர்த் தர்களுக்கு மனம் கொள்ளவில்லை. அன்னையார் தியா னத்தில் இருக்கும்போது அவரை அப்படியே தூக்கினார்

கள். ராமா என்றார் அம்மையூார். அப்படியே அம்மை யாரைப் போட்டுவிட்டு ஓட்டம் எடுத்தார்கள்.

இன்னொரு முறை சில கள்வர்கள் ஆச்சிரமத்தில் நிறையப் பணம் இருக்கும் என்று நினைத்துக் கொள்ளை யடிக்க வந்திருந்தார்கள். இவர்களைக் கண்டதும் சுவா மியும் அன்னையும் அவர்களுடைய தொழிலுக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்று வெளியே வந்து விட்டார்கள். வந்தவர்கள் ஆச்சிரமம் முழுவதும் தேடியும் ஒரு செம்புச் சல்லியும் கிடைக்காது வெறுங் கையோடு திரும்பினார்கள். இச்செயல்களின் பின் பல பக்தர்கள் அங்கு வரத் தொடங்கினார்கள். பக்தர்கள் வந்ததால் தங்குவதற்குப் பல அறைகள் கட்டப்பட்டன. ஆச்சிரமம் விஸ்தரிக்கப் பட்டது. தியான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. சுவாமிகள் அதில் எந்த நேரமும் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டே இருப்பார்.

விடுமுறை காலங்களிற் பலர் இங்கு வந்து தங்கித் தியான சாதனைகள் பழகிச் செல்வர். காலை மாலை ஒவ்வொரு மணித்தியாலம் தவறாது ராமநாம பஜனை நடைபெறும். சுவாமிகளுடன் ஆச்சிரமவாசிகள் எல்லா ரும் விருந்தினரும் கலந்து கொள்வார்கள்.

ஆச்சிரம நிர்வாகம் முழுவதும் அன்னையின் கை யிலேயே இருந்தது. அன்னையின் சேவை அளப்பரியது. ஒருமுறை நாங்கள் பதின்மூன்று பேர் தென்னிந்திய யாத்திரை செய்து சுவாமிகளின் சந்நியாச தினத்திற்கு ஆனந்தாச்சிரமம் சென்றோம். ஓர் ஆச்சிரமவாதி அழுக்குத் துணிகளை எல்லாம் வாங்கிவருமாறு அன்னை கூறியதாகக் கூறினார். ஒவ்வொருவரும் சராசரி பத்துத் துணிகளுக்குக் குறையாமல் கொடுத்தோம். அடுத்த நாட் காலையில் அத்தனை துணிகளையும் அன்னைதான் தோய்க்கக் கண்டோம். எல்லோரும் கண்ணீர் விட்டு அழுதோம். சேவை என்றால் இது வல்லவோ சேவை. சேவையின் திரு உருவமே அன்னை கிருஷ்ணாபாய்.

காலை உணவின்போது நாங்கள் பதின்மூன்று பேரும் ஒரு பந்தியில் உண்ணவில்லை. 3,4 பந்திகள்

நடந்தன. இருநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அவ்விழா விற்கு வந்திருந்தனர். இலங்கையிலிருந்து வந்தவர்களில் மூவர் உண்ணவில்லை என்று அன்னையின் அழைப்பு வந்தது. அது உண்மை. எப்படி அன்னை அறிந்திருக்கக் கூடும். மூவர் ஒரு அலுவலாக வெளியே சென்றிருந் தனர். அவர்கள் சென்றதையோ வந்ததையோ யாரும் அறியார். அப்படியானால் அன்னைக்கு எப்படித் தெரிந்தது என்றொரு கேள்வி. அதுதான் அன்னையின் சேவையின் சக்தி. தியாக சக்தி என்றே கூறவேண்டும். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய அன்னையாகவே கிருஷ்ணாபாய் விளங்கினார். அதனாலேதான் அன்னை கிருஷ்ணாபாய் என்னும் பெயரையும் பெற்றார்.

சுவாமிகள் ஆத்மீக விஷயங்களைக் கவனித்துக் கொண்டிருக்கையில் அன்னையோ ஆச்சிரம நிர்வாகத் தைச் செவ்வனே கவனித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு பெண்மணியும் வீட்டு நிர்வாகத்தைப் பற்றி அன்னையிடம் கற்றுக் கொள்ள வேண்டியன அனேகம் இருந்தன.

ஏதாவது விடயங்களில் ஆலோசனை செய்தால் அன்னையின் தீர்ப்பே முடிவானதாகக் கருதப்பட்டது. அந்த அளவுக்கு அன்னை எல்லா விடயங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். உதாரணமாக ஆச்சிரமத்தில் ஒரு கட்டிடம் கட்டவேண்டியிருந்தது. அதற்குப் பலரும் பலமுறைகளைச் சொன்ன போதிலும் அன்னையின் தீர்வே கடைசி ஆலோசனையாகப் பெறப்பட்டது.

அன்னையின் சமய சாதனைகள் எல்லாம் கர்மயோக சாதனைதான். அவர் வேலை செய்யும் போதே நாமஜெப மும் செய்து முடித்து விடுவார். எல்லாவேளைகளிலும் அன்னையார் பங்கேற்றுக் கொள்ளுவார். எந்த வேலையும் அவரைப் போல பரி சுத்தமாகச் செய்து முடிக்க யாரும் இல்லை. இதனால் வேலைகாரர் எல்லோருமே அன்னை யின் பார்வையிலிருந்து தப்பமுடியாது.

ஒருமுறை ஒரு வேலைக்கார அம்மா ஆச்சிரமத்தில் வேலை அதிகமாய் இருந்த வேளையில் ஏதோ சாட்டுச் சொல்லி வீட்டுற்குச் சென்றுவிட்டார். அடுத்த நாட்காலையில் அவ வந்ததும் ஆச்சிரமத்தை விட்டுச் சென்றதுமுதல் அவ படுக்கைக்குச் சென்றது வரை உள்ள விடயங்களை அப்படியே அடுக்கடுக்காகச் சொன்னா. அன்னை அவரைக் கண்டிக்கவே இல்லை. கடுகடுத்துப் பேசியதும் இல்லை. கால்கை எல்லாம் நடுங்க உடம்பெல்லாம் வியர்த்து விறுவிறுக்க அன்னையிடம் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

அன்னை அந்தத் தருணத்திலும் ஒரு புன்முறுவலையே பூத்தார். சில சமயங்களில் அன்னை யார் வேலைகாரருக்கு அவர்களது பாத்திரங்களைக் கழுவி அவரே உடனிருந்து உணவு பரிமாறுவார். இது ஒன்றே அன்னையின் நிர்வாகத் திறமையின் இரகசியமாகும்.

அன்னையும் சுவாமியும் அவர்களுடைய சீடரிற் சிலருமாக அகில உலக சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டனர். சில இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பு அடியேனிடம் ஒப்படைக்கப்பட்டது. முன்கூட்டியே திட்டங்கள் தீட்டிச் சீரான முறையில் அந்த யாத்திரையை ஒழுங்கு செய்திருந்தேன். உடன் வந்திருந்தவர்கள் அத்தனைபேரையும் உண்ணச்செய்து சுவாமியை ஆறுதல் எடுக்கச் செய்து விட்டுத்தான் உண்பது அடியேனுடைய வழக்கம். நாங்கள் தங்கியிருக்கும் வீடுகளில் உள்ளவர்கள்கூட அடியேன் உண்டேனோ இல்லையோ என்று கேட்கத் தவறிவிடுவார்கள்.

அன்னை சுவாமிகளை உறங்கச் செய்துவிட்டு அடியேன் சாப்பிடும் இடத்திற்கு வந்துவிடுவார். நீ நன்றாகச் சாப்பிட்டால் தானே எங்களுடைய யாத்திரையில் எங்களுக்கு உன்னால் உதவி செய்ய முடியும். அன்னை தனது கையினாலேயே உணவு பரிமாறுவார். ஒரு நாள் விரலிற் சிறு காயம் ஏற்பட்டு விட்டது. அன்னையே

உடனிருந்து உணவைக் குழைத்து ஊட்டினார். அடியேனுடைய கண்கள் கலங்கிவிட்டன. ''அம்மா இந்தக் காயம் ஏன் வந்தது தெரியுமா? உங்கள் கையினால் உண்பதற்காகத்தான் இக்காயம் வந்தது'' என்றேன். இல்லாவிட்டால் இக்காயம் வந்திருக்கவே நியாயம் இல்லை. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய அன்னையாகவே விளங்குவதைக் கண்டு பூரிப்படைந்தோம். மணிவாசகர் கூறிய பால் நினைந்தூட்டும் தாய்க்கு உதாரணமாகக் கூறினால் அன்னையாரையே கூறவேண்டும்.

அடியேன் தங்கிய இடங்களிற் சுவாமிகளைப் படுக்கச் செய்து விட்டு அடியேனுக்குப் படுக்கை, படுக்கை விரிப்பு, தலையணை முதலியன சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துச் செல்வார்.

ஒருமுறை நண்பர் ஒருவருக்கு அடியேனுடைய தலையணையையும் போர்வையையும் கொடுத்துவிட்டு அடியேன் வெறும் பாயில் படுத்துவிட்டேன். பகல் முழுவதும் அலைச்சல் இருப்பதனால் படுத்த உடனேயே அயர்ந்து தூங்கிவிடுவோம். அன்னை வந்து பார்த்த போது அடியேன் வெறும் பாயிற் படுத்து உறங்குவதைக் கண்டு ஓடிச் சென்று தனது தலையணையைக் கொண்டு வந்து அடியேனுடைய தலைக்கு வைத்துத் தனது போர்வையால் போர்த்தியும் விட்டா.

அயர்ச்சி நீங்கியதும் உணர்வு வந்தது. படுக்கும்போது தலையணையும் இல்லை. போர்வையும் இல்லையே. அன்னை அந்த வீட்டுக்கார அம்மாவிடம் செல்லமாகக் கடிந்து கொண்டாவாம். அடுத்த நாள் அந்த அம்மா அடியேனுக்குக் கூறினார். அன்னையின் அன்புக்கு எல்லையில்லை. அது ஆழம் காணமுடியாத அன்பு. இந்த அன்பை அடியேனால்தான் உணர முடிந்ததே தவிர வேறு யாராலும் உணரமுடியவில்லை.

ஆனந்தாச்சிரமம் செல்பவர்களில் இலங்கை வாசிகளிடம் அடியேனைத் தெரியுமா என்றும் சுகமாக இருக்கிறாரா என்றும் அன்னையார் விசாரிக்கத் தவறு

வதில்லை. இந்த அன்புணர்வுதான் அடியேனை வாழ வைக்கிறது என்பது அடியேனுடைய நம்பிக்கை.

அகில உலக யாத்திரையின்போது அன்னையும் சுவாமிகளும் நாவலப்பட்டிட்டிக்கு வருகை தந்தார்கள். பாடசாலை மண்டபம் ஒன்றில் சுவாமிகளுடைய பேச்சும் ஆத்மஜோதி நிலையத்தில் பாதபூஜையும் நடைபெற்றன. 6 மணிக்கு பேச்சு என்று நோட்டீசில் கண்டிருந்தது. சுவாமிகள் சரியாக ஆறுமணிக்கு மேடைக்கு வந்தார்கள்.

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம் என்று தொடங்கினார். வரவேற்புரை தலைமையுரை மாலை அணிதல் எதுவுமே நடைபெறவில்லை. சரியாக ஏழு மணிக்கு பேச்சை முடித்தார். ஆறுமணி என்றால் கூட்டம் ஏழுமணிக்குத்தானே ஆரம்பமாகும் என்று நினைத் தவர்கள் எல்லாரும் ஏமாந்து போனார்கள்.

அடுத்த நாட்காலை 7¼ மணிக்குப் பாதபூஜை என்று கூறப்பட்டது. முதல்நாள் ஏமாந்தவர்கள் எல்லாரும் ஆறுமணிக்கே வந்து விட்டனர். மகான்களின் தரிசனம் எங்கள் வாழ்க்கையிலும் பல திருப்புமையங்களை உண்டாக்கும் என்பதை உணர முடிந்தது.

# காட்டுச்சாமியார் தரிசனம்

திருவண்ணாமலை பஞ்சபூதஸ்தலங்களில் ஒன்று. அக்கினி என்ற பூதத்தின் மயமானது. ''அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே'' என்பது தேவாரம். பிரம விஷ்ணுக்கள் இருவரும் தம்முள் மாறுபட்டுச் சமர் புரிந்த சமயம் பிரமம் சோதியாய்த் தோன்றி அவர்களுக்கு அறிவு கொளுத்திய இடம் திருவண்ணாமலையாகும். இதனை மணிவாசகர் ''ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ்சோதி'' என் பார். ''அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ் சும் விண்ணோர் மணித் தொகையின் வீறற்றாற்போல்'' என்று இன்னோர் இடத்தில் கூறுவார்.

மணிவாசகப் பெருமான் திருவெம்பாவைப் பாடலைப் பாடிய இடம் திருவண்ணாமலையாகும். ரமணமகரிஷி வாழ்ந்து சோதிமயமான பெருமை அண்ணாமலைக்குரியதாகும். அண்ணாமலை என்ற சொல்லை யாரோ ஒருவர் சொல்லக்கேட்டு அதனால் மனம் கவரப் பெற்று துறவுபூண்ட பெருமை ரமணருக் குரியது

பல மகான்கள் தவம் புரிந்த திருவண்ணாமலையைச் சுற்றி வருதலே ஒரு சமய சாதனையாகும். இதனைக் கிரிப்பிரதட்சணம் என்பார்கள். மலையைப் பிரதட்சணமாக வர எட்டுமைல் தூரமாகும். ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் தேதி தொடக்கம் மூன்று தினங்களுக்கு திருவண்ணாமலையில் அருணகிரிநாதர் விழா கொண்டாடுவார்கள். அருணகிரிநாதர் பிறந்த

இடமும் அவர் முருகனருள் பெற்ற இடமும் திருவண்ணாமலைதான்.

அருணகிரிநாதர் விழாக் கொண்டாடும்போது முதலில் 65க்கு மேலான திருப்புகழ்க் கோஷ்டிகள் பஜனை செய்து கொண்டே கிரிப் பிரதட்சணமாக வருவார்கள். பித்துக்குளி முருகதாஸ், ஹரிதாஸ் போனற வர்களே ஒவ்வொரு திருப்புகழ்க் கோஷ்டிகளுக்குந் தலைமை தாங்கி நடாத்துவார்களானால் அவ்விழாவின் பெருமையை யாரால் அளவிட்டுரைக்க முடியும்?

மூன்று நாட்களுக்கு இவ்விழா 24 மணி நேரமும் இடைவிடாமல் நடந்து கொண்டே இருக்கும். அண்ணா மலை வீதி எங்கும் பந்தலாகவே காணப்படும். மக்கள் விழாவிற்கு வருவதும் போவதுமாகவே இருப்பார்கள். எந்த நேரம் பார்த்தாலும் இலட்சக் கணக்கான மக்கள் கூடி இருப்பார்கள்.

அடியேன் ரமணாச்சிரமத்தில் இருந்து சாதனை புரிந்த நாட்களில் ஒருநாள் மாலை நேரம் தனியாகவே கிரிப்பிரதட்சணம் செய்து கொண்டிருந்தேன். ஒரு அறி வித்தற் பலகையில் 'காட்டுச்சாமியார் ஆச்சிரமத்திற்குச் செல்லும் வழி' என்று எழுதப்பட்டிருந்ததோடு ஒரு அம் புக்குறியும் போடப்பட்டிருந்தது.

மகான்களைத் தரிசித்தலில் ஒரு தீராத வேட்கை இருந்த படியினால் அவ்வம்புக்குறி காட்டிய வழியே சென் றேன். சுமார் ஒரு மைல் தூரம் நடந்திருப்பேன். ஒரு கேணி தென்பட்டது. அக்கேணியின் படித்துறையில் சுவாமி ஒருவர் தவஞ்செய்து கொண்டிருக்கக் கண்டேன். சடையாலும் தாடியாலும் மூடப்பெற்ற முகப் பொலிவுடையவராகக் காணப்பட்டார்.

சுமார் பத்தடி தூரத்தில் இருந்தே வணங்கிவிட்டு அடி யேனும் அவரைப் பார்த்தவாறே தியானத்தில் அமர்ந்தேன். மனம் துரிய நிலைக்கே சென்றுவிட்டது போல் இருந்தது. இது அவரது சந்நிதானப் பெருமை யாகும். சுமார் அரை மணி சென்றிருக்கும். தியானம்

கலைந்து சுவாமிகள் விழித்திருப்பதைக் கண்டேன். அடியேன் அவரை நோக்கிச் சென்று சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினேன். தமது கைகளினால் தலையை வருடிக் கொடுத்தார். மின்சாரம் பாய்ந்தது போன்ற ஓர் உணர்வு. சுவாமிகள் வருடிய சுகத்தில் நீண்டநேரம் படுத்துவிட்டேன் போலிருக்கிறது. சுவாமிகள் அடியேனுடைய தலையைத் தொட்டுத் தூக்கினார்கள். முகமெலாங் கண்ணீர் வார எழுந்து நின்றேன். எங்கிருந்து வருகிறீர் எனக் கேட்டு நாட்டு நிலைமைகள் பற்றியும் விசாரித்தார்கள். பின்னர் ஓர் உபதேசம் செய்தார்கள். அது பின்வருமாறு: ''ஒருவன் பிழை செய்யச் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் பிழை செய்யா மலிருக்கப் பழகிவிட்டானானால் அவனுக்கு வேறு சாதனையே தேவை இல்லை.'' உலகத்தில் வாழும் மனிதரில் பெரும்பாலோர் பிழை செய்யச் சந்தர்ப்பம் ஏற்படாமையினால்தான் நல்லவர்களாக வாழுகின்றார்கள்.

இந்த உபதேசத்தை அடியேன் அடிக்கடி நினைவு கூறுவதுண்டு. மனம் அடிக்கடி அலை பாய்ந்து செல்லும். அப்பொழுதெல்லாம் இந்த உபதேசத்தை நினைவு கூருவேன்.

இராமகிருஷ்ண பகவான் ஒருநாள் சாரதா தேவியாருடன் தனிமையில் உறங்கிக் கொண்டிருக்கிறார். சாரதா தேவியார் கன்னி கழியாத இருபது வயதுப் பருவ மங்கை. அவரோ இராமகிருஷ்ணருக்குச் சொந்த மனைவி. பெற்றோர் விரும்பிப் பெரியோரால் திருமணம் செய்து வைக்கப்பட்ட பெண். அவளை அனுபவிக்க எந்தத்தடையும் இல்லை. சாரதாவும் மறுக்கப்போவதில்லை.

அவருடைய மனம் அலைபாய்ந்தபோது தனக்குள்ளே தானாகவே பேசிக் கொண்டார். ''ஏ மனமே! நல்ல பருவமுடைய உனக்குச் சொந்தமான ஒரு பெண் உனக்கு அருகிலேயே கள்ளங்கபடமற்ற முகத்தோடு துயில் கொள்ளுகின்றாள். அவளை அனுபவிக்க எந்தத் தடையுமே இல்லை. கையால் தொட்டால் போதும் விழித்து எழுந்து விடுவாள். இப்போதெழுந்த வேகத்திற்கு அடிமையாகி நிரந்தரமான சம்சார பந்தத்திற்கு ஆளாகப் போகின்றாயா? அன்றி

நிரந்தரமான பேரின்பத்தை நோக்கிச் செல்லப் போகின் றாயா?'' என்று கேட்டுக் கொண்டார். உடனே அவருக் குச் சமாதிநிலை கூடிவிட்டது.

சொந்த மனைவியைச் சகோதரி போல தாய்போல, எல்லாவற்றுக்கும் மேலாகத் தெய்வம் போலப் பாவனை செய்து நடந்த பெருமை இராமகிருஷ்ணர் ஒருவருக்குத் தான் உண்டு. வாழ்நாள் முழுவதும் மனைவிக்குப் பக்கத் திலேயே படுத்துறங்கி, புத்திரர்களை அடுத்தடுத்துப் பெற் றெடுத்து மனைவியை ஒரு காமப் பொருளாக நினைந்து வாழும் மக்களால் இராமகிருஷ்ணரின் பெருமையை எப் பொழுதுமே உணரமுடியாது. இப்படிப்பட்டவர்கள் காட் டுச் சாமியாரின் உபதேசத்தை அடிக்கடி நினைவு கூற வேண்டும். அங்ஙனம் நினைவு கூர்ந்தால் அவ்வுபதேசம் அவர்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும்.

வள்ளலார் ஓர் இடத்திலே தனது மனதைப் பார்த்து மனதிற்குச் சாட்டை அடி கொடுக்கின்றார்.

''மனம் எனும் ஓர் பேய்க் குரங்குமடைப் பயலே
மற்றவர்போல் எனை நினைத்து மருட்டாதே
கண்டாய், இனமுறை என்சொல் வழியே இருத்
தியெனில் இருநீ, இல்லையேல் உன்னைச் சாட்
டைகொண்டு அடித்துத் திருத்துவேன்''

என்கின்றார். மகான்கள் எல்லாருமே தம்முடைய மனத்திற் குத் தாமே புத்தி சொல்லியும் தமக்குத் தாமே தண்டனை கொடுத்தும் தாமாகவே திருந்திக் கொண்டவர்கள். அவர்கள் தாமாகத் திருந்த உலகம் அவர்களைப் பார்த்துத் தாமாகவே திருந்திக் கொண்டது.

''தான் திருந்தினால் உலகம் தானே திருந்தும்''

என்பது இதனையே குறிக்கின்றது.

மனித மனத்தைத் தீயவழிகளில் இழுத்துச் செல்லும் ஆறுபகைவர்கள் எமக்குள்ளேயே வாழுகின்றார்கள். அவர்கள்தான் காமம், கோபம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் என்பவர்கள். இவர்களுக்குத் துணையாக ஐந்து வேடர்கள் இருக்கின்றார்கள். மெய், வாய், கண்,

மூக்கு, செவி என்கின்ற ஐம்பொறிகளிலிருந்து பிறந்த சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படு கின்ற ஐம்புல வேடராவர். ''ஐம்புல வேடரி னயர்ந்தனை'' என சிவஞானபோதம் பேசுகின்றது.

''புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐமேலுந்தி''

என்று ஞான சம்பந்தப் பெருமான் பேசுவார்.

''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் மற்றெல்லாம்
ஆகுலநீர பிற''

என்பார் வள்ளுவர். எமது சமயசாதனையெல்லாம் மனப் பரிசுத்தத்திற்குள்ளேயும் மன ஒடுக்கத்திற்குள்ளேயும் அடங்கிவிட்டன.

யோகி சுத்தானந்தர் இதனை

''தானும் நிறைவுற்றுத் தன்னவரும் இன்புறுதற்கான
ஒழுக்காறே அறம்''

என்று பேசுவார். தான் திருந்துவதற்காகவே இத்தனை வழிகளையெல்லாம் மகான்கள் வகுத்துள்ளார்கள்.

இவ்வழியில் திருந்தி நடப்பதற்கு நம்பிக்கை, வைராக் கியம், முயற்சி என்பன தேவையாகும். எமது உடம்பைத் தாங்குவதற்கு இரு கால்கள் இருப்பது போல எமது வாழ்க் கையைத் தாங்குவதற்கும் இருகால்கள் தேவை. அவை தான் நம்பிக்கையும் முயற்சியும் ஆகும்.

''நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம்''

என்பது பாரதியாரின் வாக்கு.

சாதனை இல்லாமல் சாத்தியமில்லை. சாதனை இல்லாமல் சமயமும் இல்லை. சமயத்தை உணரவேண்டு மானால் - கடவுளை உணரவேண்டுமானால் சாதனை என்பது மிகமிக அவசியமாகும்.

# சடைவரதர் தரிசனம்

அடியேனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும். ஒரு சாமியார் திடீரென ஒருநாள் வீட்டிற்கு வந்தார். தந்தையாரும் தாயாரும் வீழ்ந்து வணங்கினர். தாயார் அவருடைய பாதம் விளக்கத் தண்ணீருக்காக உள்ளே சென்றார்.

சாமியார் தாயாரை அழைத்தார். தண்ணீர் வேண்டாம் என்றார். ''நான் இப்போதான் கிணற்றடியில் கழுவிவிட்டு வந்தேன்'' என்றார். உண்மையில் நியாயம் அதுவல்ல. தாயார் நீர் எடுக்கச் சென்ற பானையில் தண்ணீர் இல்லை. கிணற்றடிக்குப் போக நினைத்தார் தாயார். சாமியார் அதற்கிடையில் அழைத்து விட்டார்.

தாயார் தந்தையார் இருவரும் விழுந்து கும்பிட்டபடியினால் அடியேனும் விழுந்து கும்பிட்டேன். அடியேனுடைய தலையைத் தடவினார். ''நீ சட்டம்பியாராய் இருப்பாயடா'' என்று கூறிவிட்டு, ''உலகமும் சுற்றுவாயடா'' என்றார். கடைசியில் ''ஒரு குறையும் இல்லாது வாழ்வாய்'' என்றார். சுவாமியார் அன்று சொன்னதை இன்று நினைத்துப் பார்க்கிறேன். எவ்வளவு பெரிய உண்மை. நாற்பது ஆண்டுகள் ஆசிரியத் தொழிலில் இருந்தேன். இன்று இச்சரிதத்தைக் கனடாவில் இருந்து எழுதுகிறேன் என்றாற் சடைவரதர் மகிமையை யாராலேதான் கூறமுடியும்?

இவர் அச்சுவேலியைச் சேர்ந்தவர். சலவைத்தொழிலாளர் இனத்தைச் சேர்ந்தவர். சரவணை என்னும் பெயருடையவர். சரவணைச்சாமி என்றும் வண்ணாரச் சாமி

என்றும் சாமானிய மக்கள் அழைப்பதைக் காதால் கேட்டுள்ளேன். ஒருவன் பிறந்த ஊரில் சந்நியாசியாகக் கூடாது என்று கூறுவார்கள். காரணம் பூர்வாச்சிரமப் பெயர்களைத்தான் மக்கள் அழைப்பர். மணிபாகவதர் அவர்கள் நல்லை ஆதினம் அமைத்துச் சுவாமிநாத பரமாச் சாரியார் என்று உலகம் முழுவதும் ஒப்புக் கொண்ட பின்னும் அவர் பூத உடலை நீக்கும் வரையும் மணிபாக வதர் என்றே அழைத்தனர். அவர் பூத உடலை நீத்துப் பல லாண்டுகளாகி விட்டன. இப்பொழுதும் அவரைப் பற்றிப் பேச்சுவந்தால் மணிபாகவதர் என்றே அழைக்கின்றனர். மக்களுக்குப் பூர்வாச்சிரம நினைவே தவிர அவர் சாதனையில் எவ்வளவு உயர்ந்துள்ளார் என்றோ இல்ல றத்தை விடுத்து வானப்பிரஸ்தமும் கடந்து சந்நியாசியாகிய பக்குவத்தை அடைந்துள்ளார் என்றோ புரிவதில்லை.

சடைவரதர் சரவணை என்ற பெயருடன் சிறுவனாக இருந்தபோது முத்தியானந்தர் எனப்படும் கடையிற் சுவாமிகள் இவரைக் கண்ணுற்றார். பல பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த சரவணை, கடையிற் சுவாமி களை நோக்கிச் சென்றார். உடனே சுவாமிகள் அவரை வாரியணைத்துத் தனது தலையில் இருந்த தொப்பியைக் கழற்றிச் சரவணையின் தலையிலே அணிந்து அழகு பார்த்ததோடு அவரைத் தூக்கிவைத்து ஆனந்தக் கூத்தும் ஆடினார். சரவணைக்குச் சிறுவயதிலேயே குரு அர வணைப்பும் குரு உபதேசமும் கிடைத்து விட்டன.

பலர் சடைவரதருக்குச் சீடர் ஆனார்கள். அந்தணரிற் சிலரும் சீடரானார்கள். ஏழாலையிலும் பல சைவ சித்தாந் திகளே சுவாமிகளின் சீடராகி அவர் பின்னே திரிந்ததை நானறிவேன். ஏழாலை மேற்கிலுள்ள சுடலையிலேதான் சுவாமிகளைச் சமாதி வைத்தார்கள்.

சுவாமிகளுடைய ஆச்சிரமம் மிருசுவிலில் உள்ள உசன் என்ற இடத்தில் அமைந்திருந்தது. அங்கே மங்கை யர்க்கரசி அம்மா, பூஜை அம்மா, மனோன்மணி அம்மா என்று அழைக்கப்பட்ட மூவர் சீடர்களாக இருந்தனர்.

மங்கையர்க்கரசி அம்மா யாழ்ப்பாணம் கடையிற் சுவாமி களின் உத்தம சிஷ்யையாக விளங்கிய பொன்னம்மா அம் மையாரின் இனத்தவர் ஆவார்.

பூஜையம்மா அவர்கள் சங்கானையைப் பிறப்பிட மாகக் கொண்ட நாகலிங்கப் பரதேசியாரின் தங்கையா வார். மனோன்மணி அம்மா மட்டுவிலைச் சேர்ந்தவர்.

உசன் ஆச்சிரமத்தை நாடி அந்தக் காலத்தில் குரு பூஜைகளின்போது ஆயிரக்கணக்கில் அடியார்கள் கூடுவர். அங்கு கூடுவோர் எல்லாரும் பழுத்த சிவனடியார்கள். குடா நாட்டிலுள்ள சிவனடியார்கள் அத்தனை பேரையும் உசன் ஆச்சிரமத்திற் சந்திக்கலாம்.

ஏழாலையைச் சேர்ந்த பேரம்பல வைத்தியர் சுவாமி களின் உத்தம சீடர்களில் ஒருவர். இவரது தமையனா ராகிய அருளானந்த சிவம் அவர்களும் சுவாமிகளின் முதன்மைச் சீடர் ஆவர். ஒவ்வொரு குருபூஜையின் போதும் பேரம்பலம் அவர்கள் ஏழாலையில் இருந்து காய் கறி வகைகளும் வாழை இலையும் கொண்டுவருவார். அவ் வளவு பக்திசிரத்தையாகச் சீடர்கள் ஈடுபட்டனர். இந்த அடியார்கள் யாவரும் ''கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலினராக'' விளங்கியவர்கள். இந்த அடியார் கூட்டத்தை வற்றாப்பளை அம்மன் கோயி லிலும் கதிர்காமத்திலும் நல்லூரிலும் மாவிட்டபுரத்திலும் செல்லச் சந்நிதியிலும் வல்லிபுரக் கோயிலிலும் தவறாது. சந்திக்கலாம்.

சடைவரதர் பரம்பரையில் வந்த இல்லற அடியார்கள் பலர் இன்றும் வாழ்கின்றனர். அந்த அடியார் பரம்பரை யில் வந்த குடும்பங்கள் சீரும் சிறப்புமாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கனடாவிலும் சில குடும் பங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது.

சுவாமிகள் அடியார் இல்லங்களுக்கு அடிக்கடி எழுந் தருளுவார். அவரோடு பல சீடர்களும் உடன் செல்வர். அன்று அங்கு மகேஸ்வர பூஜையும் சத்சங்கமும் நடை

பெறும். வீடுகள் தோறும் திருமுறை பாராயணமும் நடைபெறும்.

வைகாசி விசாகப் பொங்கலுக்கு வற்றாப்பளை அம்மன் கோயிலில் இந்த அடியார்கள் எல்லாரும் ஒன்று கூடுவர். வைகாசி விசாகத்தை அடுத்த ஒரு திங்கட்கிழமை தான் வற்றாப்பளையில் பொங்கல் நடைபெறுவதுண்டு. பொங்கல் முடிந்ததும் எல்லோரும் கதிர்காமத்தை நோக்கி பாதயாத்திரையை மேற்கொள்வர். பாதயாத்திரையின் போது கந்தபுராணம் படித்துப் பயன்கூறுவதும் பஜனை பாடுவதும் இடம்பெறுவது உண்டு.

அடியார்கள் எல்லாரும் குருவின் திருவடிக்குப் பூஜை செய்வார்கள். அப்பூஜை கால கதியில் திருவடிப் பூஜை என்றாயிற்று. நாம் எல்லோரும் இறைவன் திருவடியை நோக்கியே யாத்திரை செய்கின்ற படியினால் நாம் எல்லோருக்கும் சேர்த்து ஒரு பெயருண்டு. அதுதான் திருவடி யாத்திரைக்காரர் என்பது. கதிர்காம யாத்திரையை மேற்கொள்ளுவோர் கதிர்காம யாத்திரைக்காரர் என்றும் காசி யாத்திரையை மேற்கொள்ளுவோர் காசியாத்திரைகாரர் என்றும் கைலாயம் செல்வோர் கைலாய யாத்திரைக் காரர் என்றும் சொல்லப்படுவதுபோல திருவடியை நோக்கி யாத்திரை செய்வோர் அத்தனை பேரும் திருவடி யாத்திரைக் காரரேதான்.

இதனை மேற்கொண்டே பெரிய மகான்களின் பாதுகைகளை வைத்துத் திருவடிப் பூஜை நடத்துகிறார்கள். சமீபத்தில் சாயி பக்தர்கள் சாயி பகவானுக்குத் தங்கத்தால் ஒரு திருவடி செய்து அதனை அவர் காலில் அணியச் செய்து அத்திருவடியைப் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் வைத்துப் பூஜை செய்கிறார்கள். மேற்கொண்டு வெள்ளியாலோ செம்பாலோ மரத்தாலோ பாதுகைகள் செய்து உலகம் முழுவதிலும் உள்ள சாயி சமித்திகளுக்கு அனுப்பியுள்ளார்கள். இத்தகைய திருவடிப் பூஜைகள் மகேஸ்வர பூஜையுடன் நிறைவுறும்.

# தரிசனம்



ஆத்மஜோதி நா. முத்தையா